—: தமிழ் :—

# அன்றும் இன்றும்

ஆசிரியர் :

மகாவித்துவான், சிந்தாமணிச் செல்வர்

மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

வெளியிடுவோர் :

தமிழ் இயல் மன்றம்

சென்னை-1.

# தமிழ்
# அன்றும் இன்றும்

ஆசிரியர்:

சிந்தாமணிச் செல்வர்

மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

வெளியிடுவோர்:

**தமிழியல் மன்றம்**

244-245, அங்கப்ப நாய்க்கன் தெரு,

சென்னை-1.

முதற்பதிப்பு—1967

உரிமை ஆசிரியருக்கு

விலை ரூ. 1-[illegible]

டி. வி. சி பிரஸ், சென்னை-1.

# வாழ்த்துகின்றேன்!

'**தமிழ் அன்றும்—இன்றும்**' என்னும் இக்கட்டுரை, யான் சென்னைப் பல்கலைக் கழகத்தில் 1966ஆம் ஆண்டு, ஏப்பிரல் திங்கள், 4, 5ஆம் நாள்களில் ஆற்றிய சொற்பொழிவாகும். அவ்வமயம் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் உயர்திருவாளர் **டாக்டர் மு. வரதராசனாரவர்கள்** தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள்.

இரு நாளும் அறிஞர் பெருமக்கள் திரண்டு வந்து சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ந்தார்கள்.

அன்பர் சிலர் இதை அச்சிட்டு வெளிவரச் செய்வது பலர்க்கும் பயன்படுமெனக் கருதியதால், சென்னைப் பல்கலைக் கழகத்தினரின் இசைவைப் பெற்று வெளியிடுகிறேன். பல்கலைக் கழகத்தினர்க்கு எனது பணிவார்ந்த நன்றி உரியது.

இச்சிறு நூல் அச்சாகி வெளி வருவதற்குத் தம்மால் இயல் உதவியனைத்தும் தயக்கமின்றிச் செய்த அனைவர்க்கும், சென்னைத் தமிழியல் மன்றத் தலைவரும் என் நண்பருமாகிய உயர்திரு. **த. சே. உமாபதியார்** அவர்களுக்கும் எனது அன்பு கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சொல்லின் செல்வர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளையவர்களின் புகழ் என்றும் தழைத்திலங்க வேண்டுமென அவரது தகவுடைமையை எண்ணி வாழ்த்துகின்றேன்!

சென்னை,
31—8—67.

**மே. வீ. வே.**

# நன்றியுரை

சென்னைப் பல்கலைக் கழகத்தில் சொல்லின் செல்வர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் பெயரால் விளங்கும் அறக்கட்டளைச் சார்பாகச் சிந்தாமணிச் செல்வர், மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள் '**தமிழ்— அன்றும் இன்றும்**' என்னும் பொருள் குறித்துத் தாம் நிகழ்த்திய சொற்பொழிவை நூலாக வெளியிடும் அரிய வாய்ப்பினை எங்கள் **தமிழியல் மன்றத்துக்கு** மனமுவந்து அளித்தமைக்கு மகாவித்துவான் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியையும் பணிவார்ந்த வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம். இந் நூலை இலவசமாக அச்சிட்டு உதவிய சென்னை, 'அருளகம்' உரிமையாளர் திரு. V. மாணிக்கம் அவர்களுக்கும், நூலுக்குத் தேவைப்பட்ட எல்லா வகையான காகிதத்தையும் உதவிய சென்னை, சத்தியா அச்சகத்தின் உரிமையாளர் திரு. கோ. சத்தியமூர்த்தி அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி உரியதாகும்.

முதற் பதிப்பாக வெளியிடப்படும் இந் நூலின் 1000 படிகளையும் எங்கள் மன்றத்தின் சார்பில் கடந்த ஐந்தாண்டுகளாக **நன்னூல், யாப்பருங்கலக் காரிகை** ஆகியவற்றைத் தமிழறிஞர்களுக்குப் பாடம் சொல்லி முடித்து, இப்போது தொல்காப்பியம்-சொல்லதிகார (நச்சினார்க்கினிய) த்தைப் பாடம் சொல்லி வரும் மகாவித்துவான் அவர்களின் 72ஆம் பிறந்த தின விழாவில் அவர்களுக்கு எங்கள் நன்றிக் காணிக்கையாக்கி மகிழ்கின்றோம்.

சென்னை-1.<br>
31—8—1967.

தமிழியல் மன்றம்

ஸ்ரீ

# முன்னுரை

*'தேன ருமகிழ்த் தொடையலும் மவுலியும்*
*திருக்கிளர் குழைக்காதும்*
*கான ருமலர்த் திருமுகச் சோதியும்*
*கயிரவத் துவர்வாயும்*
*மோன மாகிய வடிவமும் மார்பமும்*
*முத்திரைத் திருக்கையும்*
*ஞான தேசிகன் சரண தா மரையுமென்*
*னயனம்விட் டகலாவே.'* 1

அறிவு சான்ற அவைத்தலைவர் அவர்களே, அன்பார்ந்த உடன்பிறப்புரிமை வாய்ந்த செல்வியர்களே, அறிஞர் பெருமக்களே, வணக்கம்!

தமிழ்ப்பேராசிரியர் உயர்திருவாளர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் பெயரால் விளங்கும் அறக்கட்டளைச் சொற்பொழிவை இவ்வாண்டு நிகழ்த்தி மகிழும் பேற்றை எனக்களித்தருளிய சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்!

'சொல்லின் செல்வர்' எனத் தமிழ் கூறும் நல்லுலகம் பாராட்டும் நல்லறிஞர் ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள், தமிழுக்குச் செய்துள்ள பெருந்தொண்டினைத் தமிழ் நாடு என்றும் மறவாது என்பது ஒருதலை. பல்கலைக் கழகத்து நிகழ்ந்த அவர்தம் வெள்ளி விழா

1. பெருந்தொகை, 1824

நினைவு என்றும் என் உள்ளத்தில் அகலாதிருக்கும். அறிவொடு திருவும் பெற்று, தமிழன்னையளித்த தவப்புதல்வராய்த் திகழும் பெரியார் பலரும், சொல்லின் செல்வர் காட்டிய நல்வழியைப் பின்பற்றி என்றுமுள தென்றமிழ்க்கு ஏற்றமளிக்கும் துறையில்,

*ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே*
*செல்லும்வாய் எல்லாம் செயல்'*

என்னும் வள்ளுவர் வாய்மொழியை உள்ளத்தமைத்து ஆவன செய்தல் வேண்டுமென விழைகின்றது என் உள்ளம்.

யான் ஆற்ற விழைந்த சொற்பொழிவின் பொருள், 'தமிழ்—அன்றும் இன்றும்' என்பது. இச் சொற்பொழிவால், யான் தமிழைப் பற்றி நம் முன்னோர்கள் கொண்டிருந்த கொள்கைகளையும், அவர்கள் விட்டுச் சென்ற தமிழ்க் கருவூலங்களை ஆராய்ந்து தமிழன்னையைத் தக்க அணிகலன்களால் தகைபெறச் செய்து வரும் இக்கால அறிஞர்களின் கருத்துகளையும் நினைவு கூர்ந்து மகிழ விழைகின்றேன்.

*'சிலகற்றார் கண்ணும் உளதாம் பலகற்றார்க்கு*
*அச்சாணி அன்னதோர் சொல்'*

என்பது சான்றோர் கூற்றாதலின், எனது சொற்பொழிவிலும் பயன் தரத்தக்கன சில இருக்குமெனக் கருதி உங்கள் முன்னிலையிற்பேச நிற்கின்றேன்.



சிந்தாமணிச் செல்வர்
மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

# தமிழ்—அன்றும் இன்றும்

## மக்களும் மொழியும்

உலக உயிர்களுள் உயர்வு பெற்று, 'மக்கள்' என்று மதிப்புடன் சுட்டப்படும் பெருமைக்கு உரியவர் மாந்தரே.

*' உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே;*
*அஃறிணை என்மனார் அவர்அல பிறவே ;*
*ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே.'*

எனத் தொல்காப்பியர் தாம் இயற்றிய தொல்காப்பியம், சொல்லதிகாரத்தில் கிளவி ஆக்கத்தைத் தொடங்குவது நாம் சிந்திப்பதற்குரியது. "உலகத்துப் பொருள்கள் எல்லாவற்றினும் 'மக்கள்' என்று சுட்டப்படும் பொருளை 'உயர்திணை' என்று சொல்லுவர்; அவர் அல்லாத பொருளையும் பிற பொருளையும் 'அஃறிணை' என்று சொல்லுவர் ஆசிரியர். அவ்விரு திணையின்கண்ணும் ஒலிப்பன சொல்லாவன," என்பது இந்நூற்பாவின் பொருள். "மக்கள் வழங்கும் மொழியே அவர்களை மற்ற உயிர்த்திரளிலிருந்து பிரித்துச் சுட்டற்குரியது," எனத் தொல்காப்பியர் கருதியது, அவரது சொந்தக் கருத்தன்று; அவருக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த சான்றோரும் அக்கருத்தையே கொண்டிருந்தனர்

என்பதை 'என்மனர்' என்னும் சொல்லாட்சி எடுத்துக் காட்டுகின்றது.

எழுத்துச் சொல்லுக்குக் கருவியாயும், சொல் பொருளாய்விற்குக் கருவியாயும் அமைந்து மொழியை வளர்த்த முறையை நிரல்பட அமைத்தே, எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் எனத் தமது நூலை முக்கூறுபடுத்தி வழங்கினர் தொல்காப்பியர் எனக்கொள்ளலாம். அதிகாரங்களின் உட்பிரிவுகள், ஒவ்வோர் அதிகாரத்திற்கும் ஒன்பதாய் அமைந்ததும் உன்னுதற்குரியது. 'ஒன்பது' என்னும் எண், தன்னகத்தே மறைபொருள் ஒன்றை அடக்கி வைத்துள்ளது எனக் கருதலாம். அம்மறைபொருள் யாது? கணித நூலுக்குத் துணை செய்யும் எண், ஒன்பதின் மிக்கது இல்லை. ஒன்றுக்குக் கீழ்ப்பட்ட எண் வாய்பாடாகிய கீழ்வாயிலக்கத்தைத் (பின்னம்) தன்னுள் அடக்கித் தொடக்க முதலாயமைந்த ஒன்றென்னும் எண், ஒன்பது வரையிற்பெருகி, அதற்குமேல் எண் இன்மையைக் காட்டும் சுன்னம் என்னும் சுழியைப் பெற்று, 10, 20, 30, 40, 50, 60, 70, 80, 90, 100, 1,000, 10,000, 100 000 எனக் கணிதத்தை வளர்ப்பதை அறிகிறோம். இங்ஙனமே, தொல்காப்பியத்துள் அதிகாரத்தின் பிரிவுகளாகிய ஒன்பது இயல்களே அவ்வதிகாரத்தின் இலக்கணம் முழுவதையும் எஞ்சுதலின்றி எடுத்துரைத்துவிட்டன எனக் கருதற்கு இடமுண்டு போலும்! நிறைமொழி மாந்தருள் ஒருவரல்லரா தொல்காப்பியர்!

'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப.'
(தொல். பொ. 8 : 171)

என்பது பண்டையோர் கருத்தை எதிரொலிக்க வில்லையா ?

முற்ற முடிந்த இயற்றமிழ் நூலாகிய தொல்காப்பியமும், தமிழ் என்று பிறந்தது என்பதைத் தெரிவிக்கவில்லை. ஏன்? மொழியின் பிறப்பு, வரலாற்றுக் காலத்திற்கு அப்பாற்பட்டது ஆதலின்.

"தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும்—இவள்
என்று பிறந்தவள் என்றுண ராத
இயல்பின ளாம்எங்கள்தாய்.

"யாரும் வகுத்தற் கரிய பிராயத்தள்
ஆயினு மேயெங்கள்தாய்—இந்தப்
பாருள்எந் நாளும்ஓர் கன்னிகை என்னப்
பயின்றிடு வாள்எங்கள்தாய்."

எனக் கவிஞர் **பாரதியார்** பாரத அன்னையைப்பற்றிக் கூறிய புகழுரை, நம் தாய் மொழியாகிய தமிழ் மொழிக்கும் பொருந்தும் அன்றோ ?

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பகுத்தறிவு பெற்ற மக்களால் பெரிதும் முயன்று உருவாக்கப்பட்ட மொழியில்லையாயின், இன்று நாம் தொல்காப்பியம் உள்ளிட்ட இலக்கணங்களையும், அவ்விலக்கணங்களை வகுப்பதற்கு இலக்காயிருந்த இலக்கியங்களாகிய அளப்பரிய கருவூலங்களையும் பெற்று,

"இருந்தமிழே! உன்னால் இருந்தேன்; இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்."

என்று தமிழ்விடு தூது உடையார் கூறி மகிழ்வதைப் போல, மகிழ இயலுமா?

உலகம் தோன்றியக்கால் தொட்டுப் பிறந்து வாழ்ந்து இறந்த அ.்.றிணைப் பொருள்களை வரையறை செய்து கூற வல்லார் யாவர்? அவை, தம் பட்டறிவைத் தம் கால்வழிகள் தொட்டறிதற்குத் துணை செய்ய இயலாமைக்குக் காரணம் என்ன? மொழி பெறாத முட்டுப்பாடேயன்றோ? எனவே, மொழியே, மக்கள் பெற்ற பெறலரும்பேறுகளுள் தலையாய பேறு எனக்கொள்ளுதல் வேண்டும்.

உலக மக்களுள் நாகரிகம் பெற்ற மக்களால் வழங்கப்படும் மொழிகள் அனைத்தினும் நனி சிறந்து விளங்கும் பண்பட்ட மொழிகளுள் ஒன்றாய் விளங்கும் தமிழ் மொழி, நனி நாகரிகம் பெற்ற மொழி என்பதை நடுவு நிலை நின்று ஆராய்வார் அனைவரும் ஒப்புக்கொள்வா என்பது ஒருதலை.

## தமிழ் வளர்ச்சி

பண்டைத் தமிழ்ச்சான்றோர், தலை இடை கடை என்னும் முச்சங்கங்களில் அமர்ந்து தமிழ் ஆராய்ந்தனர் என்பர். அவர்தம் ஆராய்ச்சியின் பயனாய் வெளி வந்த நூல்கள் எண்ணற்றவை என்பதை நாம் அறிகின்றோம். இயல், இசை, நாடகம் என்னும் முத்துறையிலும் இலக்கிய இலக்கணங்கள் இயற்றப் பட்டன என்பதற்குச் சான்றுகள் பல உள்ளன. அச்

சான்றுகளுள் ஒன்று, இறையனார் களவியல் உரை காட்டுவது. அதனைக் காண்போம் :

## சங்கம் வளர்த்த தமிழ்

### தலைச்சங்கம் :

'தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம்' என மூவகைப்பட்ட சங்கம் இரீஇயினார் பாண்டியர். அவருள் தலைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும், திரிபுரமெரித்தவிரிசடைக் கடவுளும், குன்றெறிந்த முருகவேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனும் என இத்தொடக்கத்தார் ஐந்நூற்று நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினார் என்ப. அவர்களால் பாடப்பட்டன, எத்துணையோ பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும்,1 களரியாவிரையும் என இத்தொடக்கத்தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்கமிருந்தார் என்ப. அவர்களைச் சங்கம் இரீஇயினார், காய்சின வழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாக எண்பத்தொன்பதின்மர் என்ப. அவருள் கவியரங்கேறினார் எழுவர் பாண்டியர் என்ப. அவர் சங்கம் இருந்து தமிழாராய்ந்தது, கடல் கொள்ளப்பட்ட மதுரை என்ப. அவருக்கு நூல் அகத்தியம்.

1. இவை 'பெருநாரை, பெருங்குருகு' எனவும் வழங்கப்படும். 'இனி இசைத்தமிழ் நூலாகிய பெருநாரை பெருங்குருகும் பிறவும் . . . இறந்தன,' என்பது சிலப்பதிகாரப் பாயிரவுரையில் அடியார்க்கு நல்லார் தரும் குறிப்பு.

## இடைச்சங்கம் :

'இனி இடைச்சங்கமிருந்தார், அகத்தியனாரும், தொல்காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழி மோசியும், வெள்ளூர்க் காப்பியனும், சிறுபாண்டரங்கனும், திரையன் மாறனும், துவரைக்கோனும், கீரந்தையும் என இத்தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு மூவாயிரத்து எழுநூற்றுவர் பாடினர் என்ப. அவர்களால் பாடப்பட்டன, கலியும், குருகும், வெண்டாளியும், வியாழமாலை அகவலும் என இத்தொடக்கத்தன என்ப. அவர்க்கு நூல் அகத்தியமும், தொல்காப்பியமும், மாபுராணமும், இசை நுணுக்கமும், பூத புராணமும் என இவை என்ப. அவர் மூவாயிரத்து எழுநூறி யாண்டு சங்கமிருந்தார் என்ப. அவரைச்சங்கம் இரீஇயினார், வெண்டேர்ச் செழியன் முதலாக, முடத்திருமாறன் ஈறாக ஐம்பத்தொன்பதின்மர் என்ப. அவருள் கவியரங்கேறினார் ஐவர் பாண்டியர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தது, கபாடபுரத்து என்ப. அக்காலத்துப் போலும் பாண்டிநாட்டைக் கடல் கொண்டது!

## கடைச்சங்கம் :

'இனிக் கடைச்சங்கம் இருந்து தமிழாராய்ந்தார், சிறுமேதாவியாரும், சேந்தன் பூதனாரும், அறிவுடையரனாரும், பெருங்குன்றூர்க் கிழாரும், இளந்திருமாறனும், மதுரையாசிரியர் நல்லந்துவனாரும், மருதனிளநாகனாரும், கணக்காயனார் மகனார்

நக்கீரனுரும் என இத்தொடக்கத்தார் நாற்பத்தொன் பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற்பத் தொன்பதின்மர் பாடினுர் என்ப. அவர்களாற்பாடப் பட்டன நெடுந்தொகை நானூறும்,[1] குறுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும், புறநானூறும், ஐங்குறு நூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது பரிபாடலும், கூத்தும், வரியும், சிற்றிசையும், பேரிசையும் என்ற இத்தொடக்கத்தன. அவருக்கு நூல் அகத் தியமும் தொல்காப்பியமும் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது ஆயிரத்தெண்ணூற்று ஐம்பதிற்றி யாண்டு என்ப. அவர்களைச் சங்கம் இரீஇயினுர்[2] கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈருக நாற்பத்தொன் பதின்மர் என்ப. அவருள் கவியரங்கேறினுர் மூவர் பாண்டியர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந் தது உத்தரமதுரை என்ப.'

இறையனுர் களவியல் உரை குறிக்கும் இவ்வர லாறு பண்டு தொட்டு வழங்கி வந்த செவிவழிச் செய்தி என்பதை இதிற்பயின்று வந்துள்ள 'என்ப' என்னும் சொல்லாட்சி விளக்குகின்றது. இறையனுர் என்பவர், கடைச்சங்கப் புலவருள் ஒருவரெனக் கருதப்படுகின்றுர்.

*"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி !*
*காமஞ் செப்பாது கண்டது மொழிமோ :*
*பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்*

1. அகநானூறு, 2. இருக்கச்செய்தவர்.

*செறியெயிற் றரிவை கூந்தலின்*
*நறியவும் உளவோநீ யறியும் பூவே?"*

என்பது, குறுந்தொகை இரண்டாம் பாடல்; 'இயற்கைப் புணர்ச்சிக்கண் இடையீடுபட்டு நின்ற தலைமகன், தலைமகளை நாணின் நீக்குதற்பொருட்டு, மெய்தொட்டுப் பயிலுதல் முதலாயின அவள் மாட்டு நிகழ்த்திக் கூடி, தனது அன்பு தோன்ற நலம் பாராட்டியது,' என்பது இச்செய்யுளடிக் குறிப்பாகக் காணப் படுகிறது. இதனை இயற்றியவர் பெயர் **இறையனர்** என்பது.

*['பூந்தாதாகிய மகரந்தத்தை ஆராய்ந்து உண்கின்ற வாழ்க்கையையும் உட்சிறகையும் உடைய வண்டே, (நீ என் நிலமாகிய குறிஞ்சி நிலத்தின் வண்டாதலின், நான்) விரும்பியதையே கூருமல், (நீ கண்கூடாய்) அறிந்ததையே சொல்லுக: நீ அறியும் பூக்களுள், (எழுபிறப்பிலும் என்னேடு) பழகுதலைப் பொருந்திய நட்பையும், மயில் போலும் சாயலையும், நெருங்கிய பற்களையும் உடைய இந்த அரிவையின் கூந்தலைப்போன்ற நறுமணமுடைய பூக்களும் உள்ளனவோ?' என்பது இதன்பொருள்.]*

இச்செய்யுளைத் தொல்காப்பிய உரையாசிரியர் களாகிய இளம்பூரணர், சேனவரையர், பேராசிரியர், நச்சினர்க்கினியர், கல்லாடர் என்பாரும், நன்னூல் உரையாசிரியராகிய மயிலைநாதரும், சங்கரநமச்சி வாயரும், நம்பியகப்பொருள் உரையும், யாப்பருங் கல விருத்தியுரையும், தமிழ் நெறி விளக்கமும், களவியற்காரிகையும், இறையனர் களவியலுரையும் மேற்கோளாக எடுத்தாண்டிருப்பதைக் காண்கிறோம்.

இந்நூலுரைகளுள் 'இறையனார்' என்பது சிவபெருமானைக் குறிப்பதாகப் புலப்படவில்லை.

கடைச்சங்கத்துப் புலவர் எனக் கூறப்படும் 'இறையனார்' என்னும் இப்புலவர் பெயர், ஒப்புமையால் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள் பெயராகக் கருதப்பட்டதெனக் கொள்ளலாம். எனவே, 'இஃது ஆலவாய் இறையனார் தருமியென்னும் பிரமசாரிக்குப் பொற்கிழி வாங்கிக் கொடுத்த 'சிந்தா சமுத்தி அகவல்' எனத் 'தமிழ் நாவலர் சரிதை' என்னும் நூல் கூறுகிறது. இக்கதையைத் திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணமும், கடம்பவன புராணமும், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற்புராணமும் விரிவாய்க் கூறக் காணலாம். மற்றும் இச்செய்தி, கல்லாடம் முதற்செய்யுளிலும், சீகாளத்திப்புராணம் நக்கீரச் சருக்கம் 61ஆம் செய்யுளிலும், தமிழ்விடு தூதின் 108, 114, 115ஆம் கண்ணிகளிலும் குறிக்கப்பட்டிருப்பதும் காணலாம். இக்கதை அறிஞர் ஆய்வுக்குரியது.

இறையனார் களவியலுரையை வரலாற்றுச் சான்றாகக் கொண்டால், தொல்காப்பியர் இற்றைக்குச் சற்றேறக்குறையக் கி. மு. 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டவராதல் வேண்டும்; தமிழ்ச் சங்கங்கள் மூன்றும் 10,000 ஆண்டுகள் தமிழாராய்தலைச் செய்திருக்க வேண்டும். தமிழாராய்ந்த புலவர் தொகை 9,255 எனக் கொள்ள வேண்டும். சங்கம் இரீஇய பாண்டிய மன்னர் தொகை 197 எனக் கொள்ள வேண்டும்.

இறையனுர் களவியலுரையைப் பின் பற்றிச் சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் (13ஆம் நூற்றுண்டு) உரைப்பாயிரத்தில் 'காப்பியம்' என்பதை விளக்குங்கால், 'முந்து நூல் களிற் காப்பியம் என்னும் வடமொழிப்பெயர் இன் றேனும், ஆசிரியர், 'வடசொற்கிளவி வடவெழுத் தொரீஇ எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே,' என்ருர். '...கூத்தியர் இருக்கையும் சுற்றியதாகக், காப்பிய வாசினை கலந்தவை சொல்லி' என இரண் டாம் ஊழியதாகிய கபாடபுரத்தின் இடைச்சங்கத் துத் தொல்காப்பியம் புலப்படுத்திய மாகீர்த்தியாகிய நிலந்தருதிருவிற்பாண்டியன் அவைக்களத்து அகத் தியனுரும், தொல்காப்பியனுரும், இருந்தையூர்க் கருங்கோழி மோசியாரும், வெள்ளூர்க்காப்பியனுரும், சிறுபாண்டரங்கனுரும், மதுரையாசிரியன் மாறனு ரும், துவரைக்கோமானும், கீரந்தையாரும் என்ற இத்தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மருள்ளிட்ட மூவாயிரத்து எழுநூற்றுவர்தம்மாற்பாடப்பட்ட கலி யும், குருகும், வெண்டாளியும் முதலிய செய்யுள் இலக்கியம் ஆராய்ந்து செய்த உதயணன் கதையுள் ளும், 'கருதுவ தங்கொன் றுண்டே காப்பியக் கவிகள் காம, எரியெழ விகற்பித் திட்டார்,' எனச் சிந்தா மணியுள்ளும் (1585), 'நாடகக் காப்பிய நன்னூல் 'நுனிப்போர்' என மணிமேகலையுள்ளும் (16 : 80) பிறவற்றுள்ளும் கூறினமையானும், 'சொற்றொடர் நிலை, பொருட்டொடர் நிலை' என்னும் தொடர்நிலைச் செய்யுட்கும் 'காப்பியம்' என்று பெயர் கூறுதலும் ஆசிரியர் கருத்தென உணர்க,' எனக் கூறியுள்ளதும்;

சிலப்பதிகாரம் வேனிற்காதை உரையில், "முதலூழி இறுதிக்கண் தென்மதுரையகத்துத் தலைச்சங்கத்து அகத்தியனாரும், இறையனாரும், குமரவேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனும் என்ற இவருள்ளிட்ட நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர், எண்ணிறந்த பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும், களரியாவிரையும் உள்ளிட்டவற்றைப் புனைந்து தெரிந்து, நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு இரீஇயினார், காய்சினவழுதி முதல் கடுங்கோன் ஈறாயுள்ளார் எண்பத்தொன்பதின்மர்; அவருட்கவியரங்கேறினார் எழுவர் பாண்டியருள் ஒருவன் சயமாகீர்த்தியனாகிய நிலந்தரு திருவிற் பாண்டியன், தொல்காப்பியம் புலப்படுத்து இரீஇயினான்," எனக் கூறியுள்ளதும் இங்குக் கருதத் தக்கனவாம்.

உரையாசிரியருள் ஒருவராகிய பேராசிரியரும் (12ஆம் நூற்றாண்டு), தொல்காப்பியம் மரபியல் நூற்பா 94 உரையில் 'மூன்று வகைச் சங்கத்துச் சான்றோரும் அது கூறுார்,' என்று கூறுவதால், 'முச்சங்கம்' என்னும் வழக்காற்றைப் புலப்படுத்துகின்றார்.

எனவே, தமிழ் வளர்த்த சான்றோருள் தலைச்சங்கத்துச் சான்றோரும் இடைச்சங்கத்துச் சான்றோரும் முற்காலத்துச் சான்றோர் என வழங்கப்படும் சிறப்பினுக்குரியவராவர். பதினெண்கீழ்க்கணக்கு நூலாசிரியர்களைப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும், தொல்காப்பியம், செய்யுளியல், 158ஆம் நூற்

பாவின் உரையில், 'பிற்சான்றோர்' எனக் குறிப்பிடுவது ஈண்டுக் கவனித்தற்குரியது. 'பிற்சான்றோர்' என்னுஞ்சொற்றொடர், பதிப்பாசிரியர் சிலரால் 'பிற சான்றோர்' எனவும் பிழைபடப் பதிப்பிக்கப்பட்டது. ('பிற' என்னும் பலவின்பாற்பெயர் 'சான்றோர்' என்னும் உயர்திணைப் பலர்பாற்பெயர்க்கு அடைமொழி யாதல் மரபன்றன்றோ ?) அச்சான்றோர் பலரும் அவருள்ளிட்டோரும் இயற்றிய இலக்கிய இலக்கணங்கள் எண்ணற்றவை. அவற்றுட்பல, 'வாரணம் கொண்டதந்தோ வழிவழிப் பெயரும் மாள !' எனப் பிற்காலத்தார் கூறி வருந்தும்படி கடல் கோளுக்கு இரையாய்விட்டன. இரையாயின போக, இருப்பன சிலவே, நாம் கற்று மகிழும் தமிழ்க்கருவூலங்களாய்த் திகழ்கின்றன.

சங்க வரலாற்றைக் கூறும் இறையனார் களவியலுரையில் தேவர் சிலர் பெயர்களைக் காண்கிறோம். இப்பெயர்கள் தேவர்களைக் குறிப்பனவாகவே கொண்டு, பல கதைகள் புனையப்பட்டிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. பின்னாளிலே தேவர்கள் பெயர்கள் மக்களுக்கு இட்டு வழங்கப்பட்டதை நாம் அறிகின்றோம். இது முன்னோர் மரபைப் பின்னோர் பின்பற்றியதால் ஏற்பட்ட வழக்கு என்பதை அறியலாமன்றோ ?

யாப்பருங்கலவிருத்தி ஆசிரியர், 'மகேச்சுரர்' என்னும் பெயர் பூண்ட பேராசிரியர் என்னும் யாப்பிலக்கண ஆசிரியரை,

1. பிறை நெடுமுடிக் கறைமிடற்றரனார் பெயர் மகிழ்ந்த பேராசிரியர்
2. நீர் மலிந்த வார்சடையோன் பேர் மகிழ்ந்த பேராசிரியர்
3. திரிபுரமெரித்தவர் பெயர் மகிழ்ந்த பேரா சிரியர்
4. திரிபுரமெரித்த விரிசடை நிருத்தர் பெயர் மகிழ்ந்த பேராசிரியர்
5. கறை மிடற்றோன் பெயர் மகிழ்ந்த பேரா **சிரியர்**
6. பெண்ணொரு பாகன் பெயர் மகிழ்ந்த பேரா சிரியர்
7. பெருமான் பெயர் மகிழ்ந்த பேராசிரியர்
8. பிறைமுடியோன் பெயர் மகிழ்ந்தபேராசிரியர்
9. வாமமேகலை மாதையோர் பாகனார் நாமம் மகிழ்ந்த நல்லாசிரியர்
10. காமவேளைக் கறுத்த புத்தேள் நாமம் மகிழ்ந்த நல்லாசிரியர்
11. காமனைக் காய்ந்தவர் நாமம் மகிழ்ந்த நல் லாசிரியர்

என்னும் புனைபெயர்களால் பாராட்டுவது ஈண்டுக் கருதத் தக்கது. 'மகிழ்ந்த' என்னும் சொல் லாட்சி, 'மகேச்சுரர்' என்னும் பெயர் அப்பெயர்க் குரிய இறைவனிடத்துக் கொண்ட பெரும்பற்றுக் காரணமாகப் பெருவிருப்புடன் மேற்கொண்டது என்பதைப் புலப்படுத்துதல் காணலாம். எனவே, சங்க காலத்து வழங்கிய தெய்வப் பெயர்களைத் தாங்கிய புலவர் பலரும், பெயர் மகிழ்ந்தேற்ற பெரு

மக்களெனவே கருதலாம். இக்கருத்தைப் பிற்காலத்தார் பிறழ உணர்ந்தமையே பற்பல கதைகள்—தெய்வ மானிட வாக்கு வாதங்கள் போன்றவை-எழுந்தமைக்குக் காரணமாயிருக்கலாமெனக் கருதுகிறேன். அவற்றுக்கு அரண் செய்யும் இலக்கியங்கள் அனைத்தும் பிற்காலத்தெழுந்தனவே எனக்கொள்ளலாம்.

'பாட்டும் தொகையும்' என வழங்கப்பட்ட பதினெட்டு மேற்கணக்கை இயற்றிய சான்றோர்களின் பெயர்ப்பட்டியலுள் காணப்படும் பெயர்களுள் தேவர்களின் பெயர்கள் சிலவே; பெரும்பாலன அந்நாளில் வழங்கிய மக்கட்பெயர்களே. அவை தூய தமிழ்ப் பெயர்களாய் இருப்பது ஆராய்ச்சியாளர் அறிந்து மகிழத் தக்கதாகும். பாடியவர் பெயர் குறிக்கப்படாத தனிச்செய்யுள் பற்பல, தொகை நூல்களிற் பயின்று வரக் காண்கிறோம். அவற்றின் நயமறிந்து பாராட்டிய தொகுப்பாளர்கள், அவற்றிற்பயிலும் ஓதுவார் உள்ளத்தில் நின்று நிலவத்தக்க உவமைகள் முதலிய அணி நலம் அமைந்த சொற்றொடர்களையே அவற்றை இயற்றிய ஆசிரியர் பெயர்களாக அமைத்து வழங்கியிருப்பது, அந்நாள் தமிழறிஞர்கள் இலக்கியங்களைப் பொருளறிந்து போற்றியிருப்பதைப் புலப்படுத்துகின்றது. இது நிற்க.

## நூல் முதலிய விவரங்களை விளக்கும் தனிப்பாடல்கள்

ஏடுகள் நாளடைவில் மறைந்தொழிவதை உளங்கொண்ட அறிஞர்கள், அவற்றின் பெயராவது

மறைந்தொழியாது நின்று நிலவுதற்குக் கருவியாய் அமையலாமெனக் கருதி, அந்நூற்பட்டியலைத் தனிப்பாடல்களில் அமைத்து வைத்தமை, அக்கால நிலையுணர்வார், எக்காலமும் எண்ணிப் பாராட்டத் தக்கதாகும்.

*‘ முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை*
*பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய*
*கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்*
*பாலை கடாத்தொடும் பத்து.’*

என்பது பத்துப்பாட்டின் பெயர்ப்பட்டியல்.

*‘ முருகுநல் வாடையும் கீரன்;*
*முடத்தாமக் கண்ணிபொருந் ;*
*மருவுபாண் பாலை உருத்திரங்*
*கண்ணன் ; மகிழ்சிறுபாண்*
*புரியுநத் தத்தன்; மருதன்நன்*
*காஞ்சி; நப் பூதன்முல்லை;*
*வருமெங் கபிலன் குறிஞ்சி ;*
*மலைகடாம் கௌசிகனே.’*

என்பது பத்துப்பாட்டைப் பாடினோரின் பெயர்ப் பட்டியல்.

*‘ முருகாறு செவ்வேள் ; பொருநாறு பாலை*
*கரிகால் ; நெடுஞ்செழியன் காஞ்சி;—இருபாணும்*
*நல்லியக் கோடன், இளந்திரையன்; நன்னன்கடாம்;*
*கல்வித் தலைவர் கருத்து.’*

என்பது பாடப்பட்டோர் பெயர்ப்பட்டியல்.

*‘ முருகாறு, பொருநாறு, சிறுபாணாறு,*
*முல்லை,பெரும் பாணாறு, மதுரைக் காஞ்சி,*
*பரிதாய பொருள்தழுவா நெடுநல் வாடை,*
*பட்டினப்பாலை,குறிஞ்சி, மலைக டாமும்,*

*மருவாரும் பொழில்புடைசூழ் களந்தை மூதூர்*
*வருசிவப்ப பூபன்அருள் வேலபூபன்*
*உரையோடும் எழுதினன்;ஆ தலினல் அன்னுன்*
*ஒங்குபெருஞ் செல்வம்இசை உற்று வாழி.'*

என்பது நூல்களையும் உரையையும் ஏட்டிலெழுதிப் போற்றிக் காப்பாற்றியவரின் வாழித் திருநாமம். அப்பேரருளாளரை நாமும் போற்றி வாழ்த்து வோமாக!

*' நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறு நூ*
*ஞெத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்*
*கற்றறிந்தார் ஏத்தும் கலியோ டகம்புறமென்*
*றித்திறத்த எட்டுத் தொகை.'*

என்பது எட்டுத்தொகை நூல்களின் பெயர்ப்பட்டி யல்.

*' மருதம்ஓ ரம்போகி; நெய்தல்அம் மூவன்;*
*கருதும் குறிஞ்சி கபிலன்;—கருதிய*
*பாலைஒத லாந்தை; பனிமுல்லை பேயனே*
*நூலையோ தைங்குறு நூறு.'*

என்பது ஐங்குறுநூற்றின் ஐவேறு திணைகளைப் பாடிய வர்களின் பெயர்களை அழகுறக் கூறும் வெண்பா.

*' திருமாற் கிருநான்கு; செவ்வேட்கு முப்பத்*
*தொருபாட்டு; காடுகாட் கொன்று;—மருவினிய*
*வையையிரு பத்தாறு; மாமதுரை நான்கென்ப*
*செய்யபரி பாடல் திறம்.'*

என்பது 'பரிபாடல்' என்னும் பண் சுமந்த பாடல்கள் பாடப்பட்ட பொருள் தொகை வகைகளைப் பாகுபாடு செய்து காட்டுகிறது. இறையனூர் களவியலுரையும் தொல்காப்பியவுரையும் பரிபாடல் எழுபது எனப்

பாரித்துக் கூறுகின்றன. அவை கூறும் கூற்றுக்குத் தக்க வகையில் சான்று பகர்கிறது இவ்வெண்பா. இவ்வுண்மைக்கு மாறாக, நமக்கு இன்று கிட்டியுள்ளவை இருபத்திரண்டு பாடல்களே. அவை திருமாலுக்கு ஆறும், முருகவேளுக்கு எட்டும், வையைக்கு எட்டுமாம். இப்பாடல்களைப் பாடிய புலவர், நல்லந்துவனார் உள்ளிட்ட பதின்மூவர் ஆவர். இவ்விருபத்திரண்டு செய்யுளேனும் நம் பார்வைக்குக் கிட்டச் செய்த பெருமைக்கும் தமிழ்நாட்டின் பெருநன்றிக்கும் உரிய பெரியார் இறவாப் புகழ் நிறுவி மறைந்த பெரும் பேராசிரியர்—முதுபேரறிஞர்—தென்கலைக் கருவூலம் உ. வே. **சாமிநாத ஐயரவர்களே** என்பது அனைவரும் அறிந்ததே.

> *' நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்*
> பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
> *இந்நிலைய காஞ்சியொ டேலாதி என்பவே*
> *கைந்நிலையொ டாம்கீழ்க் கணக்கு.''*

என்னும் இன்னிசை வெண்பா, பதினெண்கீழ்க் கணக்கின் பட்டியலைப் புலப்படுத்துகிறது.

இப்பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் சங்கநூல் தொகுதியுள் குறிக்கப்படாமையும், இவற்றை இயற்றியவர் 'பிற்காலச் சான்றோர்' எனக் குறிக்கப்படுவதும் ஆராய்ச்சிக்குரியவை. பதினெண்கீழ்க்கணக்

*1. இது புல்லங்காடர் என்னும் புலவர் இயற்றியது; 60 வெண்பாக்களை உடையது; ஐந்திணைப் பொருளை அழகுற விளக்குவது; இதன்கண் உள்ள பாடல்களுள் 17 பாடல்கள் சிதைந்துள்ளன.*

-கினுள் எப்பாலவரும் போற்றும் ‘ முப்பால் ’ என்னும் பெயரால் குறிப்பிடப்படும் திருக்குறளுக்கு உரை வகுத்தவர் பதின்மர் என்பதைத்

*‘ தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்*
*பருதி பரிமே லழகர்—திருமலையர்*
*மல்லர் பரிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர் நூற்கு*
*எல்லையுரை செய்தார் இவர்''*

என்னும் பாடலால் அறிகிறோம்.

‘ மேற்கணக்கு, கீழ்க்கணக்கு ’ என்னும் குறியீடுகள், ‘ முன் தோன்றிய இலக்கியம், பின் தோன்றிய இலக்கியம் ’ அல்லது ‘ மிகுந்த அடிவரையறையுடையவை, குறைந்த அடிவரையறையுடையவை ’ என்னும் பொருளைக் குறிப்பன எனக் கருதலாம். ‘ கணக்கு ’ என்னும் சொல் ‘ இலக்கியம் ’ என்னும் பொருளிலும், ‘ எழுத்து ’ என்னும் சொல் ‘ இலக்கணம் ’ என்னும் பொருளிலும் வழங்கினவாதல் வேண்டும். ‘ கணக்கு ’ என்னும் சொல், பின்னுளில் ‘ கணிதம் ’ என்னும் பொருளையும் பெற்றதாதல் வேண்டும். ‘ கணக்காயர் ’ என்னும் சொற்றொடர், பண்டு இலக்கிய மூலபாடம் கற்பித்தவரையேகுறித்த தென்பது ஆய்தற்குரியது. ‘ கணக்காயர் மகனார் நக்கீரனார் ’ என வழங்குவதும், நாமதீப நிகண்டு ‘ கணக்காயன் ’ என்பதற்குக் ‘ கவிஞன் ’ என்று பொருள் குறிப்பதும்,

*‘ கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கறுக்கும்*
*மூத்தோரை இல்லா அவைக்களனும்—பாத்துண்ணு ந்*

*தன்மையி லாளர் அயலிருப்பும் இம்மூன்றும்*
*நன்மை பயத்தல் இல '*

என்னும் திரிகடுகச் செய்யுளும் (10) மேற்கூறிய கருத்தை வற்புறுத்தக் காணலாம்.

## இலக்கியங்களைப் பற்றிய புனைந்துரைகள் :

பதினெண்கீழ்க்கணக்கைச் சார்ந்த திருக்குறளும் நாலடியாரும் தமிழறிஞர் பலராலும் பாராட்டப்படுவனவாம். 'ஆலும் வேலும் பல்லுக் குறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி,' என்பது ஒரு முதுமொழி. இவ்விரு நூல்களும் உரையாசிரியர் பலராலும் மேற்கோளாக எடுத்தாளப்பட்டுள்ள பெருமைக்குரியவை. ஆயினும், இவ்விரு நூல்களைப் பற்றியும் வழங்கும் வரலாறுகள் வியப்புக்குரிய செவிவழிச் செய்தியைப் பின் பற்றியவையாகவே உள்ளன.

நாலடியாரைப்பற்றி வழங்கும் வரலாறு நகைப்புக்கிடம் தருவதாயுள்ளது :

' முன்னொரு காலத்தில் சமண முனிவர் எண்ணாயிரவர், அக்காலதது நேரிட்ட பஞ்சத்துக்கு ஆற்ருதவராகித் தமது தேசத்தைவிட்டுப் பாண்டி நாட்டையடைந்து, அந்நாட்டரசனுகிய உக்கிரப் பெருவழுதியால் யாதொன்ருலும் குறைவு நேரிடாதபடி ஆதரிக்கப்பட்டு வந்தனர். அவ்வாறு ஆதரிக்கப்பட்டு வந்த முனிவர்கள், தங்கள் தேசம் பஞ்சம் நீங்கிச் செழிப்புற்றதறிந்து, தங்கள் ஊருக்குப் போமாறு பாண்டியனை விடை வேண்டினர்கள். அவ்வரசன் கல்வி அறிவு ஒழுக்கங்

களிற்சிறந்த அம்முனிவர்களை விட்டுப் பிரிய மனமில்லாமல், அவர்களுக்கு விடை கொடாதிருந்தனன். இதனையறிந்த சமண முனிவர்களுள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வெண்பாவினை எழுதித் தாம் வீற்றிருந்த ஆசனத்தின்கீழ் வைத்துவிட்டு, யாருமறியாதபடி தனித்தனியாய்ப் பிரிந்து போயினர். விடிந்த பிறகு அரசன் அம்முனிவர்களைக் காணாது கவலையுற்றவனாய், அவர்கள் உறைவிடங்களை ஆராய்ந்துழி, அவர்களது பீடத்தின்கீழ் ஒவ்வோர் வெண்பா எழுதிய தனித்தனி சீட்டுகள் இருக்கக் கண்டனன். அவைகளை எடுத்து ஒன்று சேர்த்து ஆராய்ந்தபோது கருத்து வகையால் ஒன்றற்கொன்று ஒவ்வாதிருந்தமையைக் கண்டு, அவற்றை வைகையாற்றின்கண் எறிந்துவிடும்படி கட்டளையிட்டனன். எறிந்துவிட்ட அச்சீட்டுகளுள் நானூறு எதிரேறிக் கரை சேர்ந்தன. கரை சேர்ந்த அவற்றின் ஏற்றத்தைக் கண்டு, அவற்றை ஒரு நூலாக்கி, நாலடியார் என்று பெயரிட்டு வழங்கி, எதிர் ஏறாது கரை சேர்ந்தனவற்றைப் 'பழமொழி' என்றும் 'அறநெறிச்சாரம்' என்றும் பெயரிட்டு வழங்கினன் என்ப. இது,

*'மன்னன் வழுதியர்கோன் வையைப்பே ராற்றின்கண்*
*எண்ணி யிருநான்கொ டாயிரவர்—நண்ணி*
*எழுதியிடு மேட்டுக்குள் ஏடெதிரே ஏறும்*
*பழுதிலா நாலடியைப் பார்.'*

என்னும் செய்யுளாலும் அறிதற்பாற்றும். இப்பாட்டும் செவிவழிச் செய்தியைப் பொருளாகக் கொண்டதே என்பதில் ஐயமின்று. இவ்வாறன்றிச் 'சைவ சமயாசாரியருள்' ஒருவரான திருஞானசம்பந்த சுவாமிகளிடம் சமணர்கள் அனல் வாதம்

செய்து தோற்றுப்போய்ப் புனல் வாதம் செய்ய உடன்பட்டு, அவருடன் சென்று, வைகையாற்றின்கண் தாம் பாடிய பாடல்களை இட்டார்கள். அவற்றுள் நானூறு வைகையாற்றிற்கு எதிர் முகமாக 'நாலடி' எதிர் ஏறிச் சென்று திரும்பினதால், அக்காலத்துள்ளார் அவற்றை எடுத்து ஒரு நூலாக்கி 'நாலடியார்' என்று வழங்கினர் என்ப,' என்னும் இக்குறிப்பு மகாவித்துவான் கோமளபுரம் இராசகோபாலப் பிள்ளையவர்கள் இயற்றிய உரையும் ஆங்கில மொழி பெயர்ப்புமுடையதாய், திரு. கோ. வடிவேலு செட்டியாரவர்களால் பார்வையிடப்பட்டு, மதராசு ரிப்பன் அச்சியந்திர சாலையிற்பதிக்கப்பட்ட இரண்டாம் பதிப்பின் 1909ஆம் ஆண்டு வெளியீட்டின் முகவுரையில் உள்ளது.

தஞ்சைச் சரசுவதி மகால் வெளியீடாகிய நாலடியார் உரை வளம் மூலமும் மூன்று பழைய உரைகளும் அடங்கிய 1953ஆம் ஆண்டு பதிப்பிலும் இக்கதை குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பதிப்பில் மற்றொரு பாடலும் தரப்பட்டுள்ளது :

*'எண்ணு யிரவர் இசைத்தவெண்பா நானூறும்*
*கண்ணுமிந் நாலடியைக் கற்றுணரத்—தண்ணார்*
*திருக்குருகூர் மாறனையே தேர்ந்துமறை தேர்ந்த*
*திருக்குருகூர் மாறனையே தேர்.'*

இவ்வெண்பாவிற் குறித்த 'எண்ணுயிரவர் இசைத்த வெண்பா நானூற்'றுக்கும் திருக்குருகூர் மாறனுக்கும் என்ன தொடர்பு என்பது புலப்படவில்லை. இப்பாவின் தலைப்பில், 'இந்நூலை எண்ணுயிரவர் முனிவர் பாடினர் என்பதற்குப் பின்வரும் பாடல் சான்றாகும்,'

எனப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதுவும் செவிவழிச் செய்தியைப் பொருளாகக் கொண்டு இயற்றப்பட்டதே என்பதை அறியலாம்.

இக்கதை பொருந்தப் புளுகும் திறமும் பெருத எவரோ ஒருவரால் எழுதிவைக்கப்பட்டது என்பதில் ஐயமில்லை. இதைச் சம்பந்தரோடு தொடர்புபடுத்திக் கூறுவதால் இது பின்னும் பெருஞ்சிறப்பெய்தும் என்று எண்ணிய புண்ணிய சீலர் எவரோ, கதைமேல் கதை வைப்பாக மற்றொருகதையும் புனைந்துவிட்டார் என்பது மற்றொரு கதையால் தெற்றென விளங்கும்.

அரசன் ஒருவன் எண்ணாயிரவர் முனிவருக்குத் தன் அவையில் இடங்கொடுத்து அவர்தம் நாட்டுப் பஞ்சம் நீங்கும் வரையிற்பாதுகாத்தான் என்பது முதலாயின செய்திகள் அரபிக் கதையையும் புறங்காணத் தக்கன.

நாலடியார் இக்கதைக்கிணங்கத் தொகுப்பு நூலாயின், எட்டுத்தொகை நூலகளுள் ஒன்றுகச் சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும. அவ்வாறு சேர்க்கப்படாமையே இது தொகை நூல் அன்று என்பதைப் புலப்படுத்தும்.

'நாலடியார்' என்பது, ஆற்று நீரில் நாலடித் தூரம் நீர் ஓட்டத்தை எதிர்த்துச் சென்று கரையேறியது காரணமாக வழங்கிய பெயர் எனக் கூறப்பட்டது. 'அடி' என்னும் சொல்லை நீட்டலளவைப் பெயராகக் கருதியதே காரணமாகும், நாலடி நாற்பது

என்னும் வெண்பாவாலான இலக்கண நூல் ஒன்று உண்டு. அஃது அவிநயர் யாப்புக்கு அங்கமாக நக்கீரர் என்னும் புலவர் ஒருவரால் இயற்றப்பட்டது. எனவே, நாலடி என்பது நேரிசை இன்னிசை வெண்பாக்களுக்கு வழங்கிய பெயர் என்பதை அறியாத ஒருவரே இக்கதைக்கு ஆசிரியர் என்பதை அறியலாம்.

நாலடியாரை மேற்கோள் காட்டிய உரையாசிரியர் சிலர் 'நாலடி நானூறு' என்றே குறிப்பிடுகின்றனர். எனவே, அளவால் பெயர் பெற்ற நூலுக்கு எடுத்துக்காட்டாகவும் குறிக்கப்பட்டுள்ளது. யாப்பருங்கல விருத்தி, செய்யுளியல் நூற்பா நான்காவதன் உரையில் செப்பலோசையை விளக்குமிடத்து, இன்னவை பிறவும், நக்கீரர் நாலடி நானூற்று வண்ணத்தால் வருவனவும் எல்லாம் தூங்கிசைச் செப்பலோசை என அவ்வுரையாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

யான் யாப்பருங்கல விருத்தியைப் பதிப்பிக்க ஆராய்ந்த போது அவ்வேட்டுச் சுவடியைப் பேராசிரியர் S. வையாபுரிப் பிள்ளையவர்கள் அன்பு கூர்ந்து உதவினார்கள் அவ்வேட்டிலும் இக்குறிப்புள்ளது. எனவே, நாலடியார் ஆசிரியர் ஒருவரே என்பதும், அவர் பெயர் நக்கீரர் என்பதும் உறுதியாகின்றன. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்தும் தனித்தனி ஆசிரியரால் இயற்றப்பட்டிருத்தலும் இதற்குச் சான்றாகலாம். இது நிற்க.

ஒப்புயர்வற்ற அறநூலெனப்படும் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரைப்பற்றிய வரலாறும் செவி

வழிச் செய்திகளிற் சிக்குண்டிருப்பதை நாம் காண்கிறோம்.

*'அகர முதல எழுத்தெல்லாம் ; ஆதி*
*பகவன் முதற்றே உலகு.'*

என்னும் முதற்குறளின் 'ஆதி பகவன்' என்னும் சொற்றொடரைக்கொண்டு கட்டப்பட்ட கதை, நகைச்சுவைக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகும். 'ஆதி' என்பது இழிகுலப் பெண்ணின் பெயரென்றும், 'பகவன்' என்பது அந்தணனைக் குறிக்கும் பெயரென்றும், 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' ஆதலின், அவர்களையே தெய்வமாகக் கொண்டு திருவள்ளுவர் இக்கடவுள் வாழ்த்தைக் கூறினர் என்றும் புனைந்துரைக்கிறது கதை. 'ஆதி பகவன்' என்பது ஆண்பாற் பெயரென்பதைத் திருவள்ளுவர் நன்கு அறிவாரல்லரோ ?

*'உயர்திணை உம்மைத் தொகைபலர் ஈறே.'*

என்னும் இலக்கணம் அறியாதவரா திருவள்ளுவர் ? தம் பெற்றோர் பெயரைக் குறிப்பது திருவள்ளுவர் கருத்தாயின், '**ஆதி பகவர்**' என்றல்லவா குறள் செய்திருக்க வேண்டும் ? 'ஆதி பகவன்' என்பது பெற்றோரைச் சுட்டுவதாயின், வள்ளுவரின் பெற்றோரை உலகம் எப்படித் தனக்கு முதலாகக் கொள்ள இயலும் ? உலகத்திற்கு நூலளிக்க வந்த வள்ளுவர், தம் தாய் தந்தையரையா முதற்கண் உலகத்திற்கு அறிமுகம் செய்வார் ? அதன் மூலம் தாம் இழிகுல மங்கைக்கு மைந்தர் எனக் கூறிக்கொள்ளவா முந்துவார் ? வள்ளுவரின் தெள்ளறிவிற்குச் சிறிதும்

பொருந்தாத இக்கருத்தை அவர்மீது சுமத்துவதைக் காட்டிலும், அடாப்பழியொன்று இருக்க இயலுமா? இத்தனை இடர்ப்பாடுகளும் 'ஆதி பகவன்' என்னும் ஆதி தீர்த்தங்கரராகிய சமணரைக் குறிப்பதை மறைக்க வகுத்த வகையால் ஏற்பட்டனவே எனக் கூறலாம்.

நச்சினார்க்கினியர் தாம் இயற்றிய 'சீவகசிந்தாமணி' உரையில் திருவள்ளுவரைக் குறிக்கும் இடங்களில் '**தேவர்**' என்னும் பெயராலேயே குறிப்பிடுகிறார்.

*'தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்*
*மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை*
*திருவா சகமும் திருமூலர் சொல்லும்*
*ஒருவா சகமென் றுணர்.'*

என, நல்வழி கூறுகிறது. 'ஒருவாசகம்' என்பது, 'ஒப்பற்ற வாசகங்கள்' என்னும் பொருளது. சமய திவாகர வாமன முனிவர் என்பவர், சமணப்பெருமபுலவர். அவர், 'நீலகேசி தெருட்டு'[1] என்னும் நூலுக்கு இயற்றிய உரையில்,

1. இந்நூல் 'நீலகேசி' எனவும், 'நீலகேசித் திரட்டு' எனவும் வழங்கப்படும். 'திரட்டு' என்பது தொகுப்பை உணர்த்துவதாதலின், 'தெருட்டு' என்பதே 'திரட்டு' எனப் பிழைபடப் பதிப்பிக்கப் பட்டது என அறியலாம். இந்நூல் பௌத்தம் முதலிய மதங்களைக் கண்டிக்கும் எதிர் நூலாகிய சமண நூல்.

'உய்யக் கொள்வல் எனச்சொல்லி உள்ளத்தால்
கையிற் காட்டல் கரவுள தாமெனின்
பொய்சி தைத்தெதன் ? சொல்லிப் பெயர்ந்துரை
பொய்யு ரைத்திலன் என்றல் பொருந்துமோ? '

என்னும் மொக்கல வாதச் சருக்கம் 60ஆம் செய்யு ளுரையில், 'ஒருத்தனை அவ்வாறு ரக்ஷிக்க வேண்டி ளுல், எமக்குக் கை காட்டியும் நிலம் காட்டியும் வஞ் சனையாற்சொல்ல வேண்டுவ தில்லை. என்னை ?

'பொய்மையும்' வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின் ?

என்பது எம் ஒத்து ஆதலான், எனவும், ஷை சருக்கம் 87 ஆம் செய்யுளுரையில்,

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு.'

என்பது எம்ஒத்து ஆதலின், பொய்யுரைத்தலும் அற மாம்,' எனக் கூறியிருப்பதும் கருதற்பாலன. இங்ங னம் கூறியது வாதச் சருக்கத்தில் என்பதும் நினைத் தற்குரியது. இவற்ருல் சமணப் பெருமக்கள் திருக் குறளைத் தங்கள் வேதமெனப்போற்றியது தெளிவாம்.

இதற்கு மாருன கருத்துகளும் 'திருவள்ளுவ மாலை' என்னும் புனைந்துரை நூலிற் காண்கிறேம். இந்நூல் 53 வேண்பாக்களால் ஆனது. அவ்வெண் பாக்களுள் 'பூவிற்குத் தாமரையே' எனத் தொடங் கும் இன்னிசை வெண்பாத் தவிர, ஏனையவை நேரிசை வெண்பாக்களாகவே உள்ளன. அவற்றுள் முதற்பா, அசரீரியாற் பாடப்பட்டது. இரண்டாம் செய்யுள், நாமகள் பாடியது. மூன்ரும் செய்யுள் இறை

யனுர் பாடியது. ஏனையவை உக்கிரப்பெருவழுதி முதலாக, ஆலங்குடி வங்கனுர் ஈருகச் சங்கப் புலவர்கள் எனக் கருதப்படுபவர்களால் இயற்றப்பட்டவை எனக் குறிக்கப்பட்டுள்ளன. இவை திருவள்ளுவரைப்பற்றி ஆராய்வார்க்குக் கண்மறையாய் அமைவன என்னலாம்.

கடைச்சங்க நூல்களாகிய பாட்டுந்தொகையும் பிற்காலச் சான்ருேர் பாடிய பதினெண்கீழ்க்கணக்கும் தமிழ்க்கருவூலங்கள் எனக் கருதலாம்.

## தொல்காப்பியம் :

சங்க கால நூல்களுள் நமக்குக் கிட்டியவற்றுள் பழமையானதும் முழுமையானதுமான நூல் தொல்காப்பியம். பின் வந்த ஏனைய இலக்கியங்களுக்கெல்லாம் முன்ஞேடியாய் அமைந்தது தொல்காப்பியமே என்பதைப் '**பல்காயனுர்**' என்னும் பாவலர் '**பல்காயம்**' என்னும் தம் நூற்பாக்களுள் ஒன்றிற்குறிப்பிடுகிருர். பல்காயம் என்னும் நூல் முற்றும் நாம் பெற்றிலேமாயினும், தொல்காப்பியவுரை, யாப்பருங்கலக்காரிகையுரை, யாப்பருங்கல விரிவுரை உள்ளிட்ட உரைகளில் அந்நூற்பாக்களுள் பல மேற்கோளாக எடுத்தாளப்பட்டிருப்பதைக் காண்கிருேம். தொல்காப்பியம் மரபியல் சூத்திரம் 94ன் உரையில் பேராசிரியர்,

*'கூறிய குன்றினும் முதனூல் கூட்டித்*
*தோமின் றுணர்தல் தொல்காப் பியன்றன்*
*ஆணையின் தமிழறிந் தோர்க்குக் கடனே.'*

என்னும் பல்காயச் சூத்திரத்தை மேற்கோளாகக் காட்டியிருக்கிறார். இதனால், பல்காயம் என்பது தொல்காப்பியத்திற்கு வழிநூல் என்பதும், பல்காயனார் தொல்காப்பியரிடம் பெருமதிப்புக் கொண்டவர் என்பதும் புலனாகின்றன. தொல்காப்பியர் என்னும் பெயர் வழக்கு நோக்கிப் பல்காயனாரைப் **பல்காப்பியர்** எனவும், பல்காயத்தைப் '**பல்காப்பியம்**' எனவும் பதிப்பாளர்கள் பெயர் மாற்றிப் பதிப்பித்திருப்பது தவறு என்பதைப் பின் வரும் வெண்பாவைக்கொண்டு நாம் அறியலாம் : [1]

*'தொல்காப் பியப்புலவோர் தோன்ற விரித்துரைத்தார்;*
*பல்காய னார்பகுத்துப் பன்னினார்—நல்யாப்புக்*
*கற்றார் மதிக்கும் கலைக்காக்கை பாடினியார்*
*சொற்றார்தம் நூலுள் தொகுத்து,'*

இச்செய்யுள் யாப்பருங்கல முதற்சூத்திர உரையில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது.

தொல்காப்பியத்திற்கு உரை வகுத்த ஆசிரியர்கள், இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடர் என்பவர்கள். இவர்கள் இயற்றிய உரைகளுள் ஒருவரோடொருவர் மாறுபடும் உரைகளைக் காணலாம். பாடங்களிலும் சில வேறுபாடுகளை மேற்கொண்டிருப்பதை

1. *பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் பதிப்பு*

அறியலாம். எடுத்துக்காட்டாக ஒரு சூத்திரத்தின் உரையைக் காணலாம் :

'பிறிதுபிறி தேற்றலும் உருபுதொக வருதலும்
நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப.'

என்பது, தொல்காப்பியம், சொலலதிகாரம், வேற்றுமை மயங்கியல், 20ஆம் சூத்திரம்.

இச்சூத்திரத்திற்கு இளம்பூரணருள்ளிட்டார் கூறும் உரையும், தெய்வச்சிலையார் கூறும் உரையும் தம்முள் மாறுபடுகின்றன.

சேனவரையர் உரை :

'உருபு மற்றொன்றேற்றலும் தொக்கு வருதலும்' என்பது அவர் குறிக்கும் சூத்திரத் தலைப்பு.

'பிறிதோருருபு பிறிதோருருபை ஏற்றலும், ஆறுருபும் தொக்கு நிற்றலும், நெறிபட வழங்கிய வழக்கைச் சார்ந்து வருதலான் வழுவாகா.

'ஏற்புழிக்கோடல்' என்பதனால், பிறிதோருருபேற்பது ஆறுவதேயாகும்.

'பிறிதேற்றலும்' என்றமையால், தானல்லாப் பிறவுருபேற்றல் கொள்க.

எடுத்துக்காட்டு :

'சாத்தனதனை, சாத்தனதனோடு, சாத்தனதற்கு, சாத்தனதனின், சாத்தனதன்கண்,' என உருபு உருபேற்றவாறும் ;

'நிலங்கடந்தான், தாய் மூவர், கருப்பு வேலி, வரை வீழருவி, சாத்தன்கை, குன்றக்கூகை எனவும் ;

'கடந்தான் நிலம், இருந்தான் குன்றத்து' எனவும் உருபு தொக்கு நின்றவாறும் கண்டுகொள்க.

'இறுதியும் இடையும்' என்பதனை அதிகாரத்தான் வருவித்து இரண்டிடத்தும் கூட்டியுரைக்க.

'சாத்தனதனது' எனச் சிறுபான்மை தன்னையுமேற்றல், 'உரையிற்கோடல்' என்பதனுற் கொள்க.

'பெயரிறுதி நின்ற உருபு தன் பொருளோடு தொடராது பிறிதோர் உருபை ஏற்றலும், தாம் நின்று தம் பொருள் உணர்த்தற்பாலன தொக்கு நிற்றலும் இலக்கணமன்மையின், வழுவமைத்தவாறு.'

இவ்வுரையிற்காணும் எடுத்துக்காட்டுகளுள் '*சாத்தனதனை*' உள்ளிட்ட 'அது' உருபு மற்றுருபை ஏற்ற எடுத்துக்காட்டுகளை யான் அறிந்த வரையில் இலக்கியத்தில் காண்பது இயலாததாய் உளது.

இவ்வுரையை மறுத்துச் சிவஞான முனிவர் வேறுரை வகுத்தலைத் தொல்காப்பியச் சூத்திர விருத்தியுட்காணலாம்.

அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழாசிரியராயிருந்த கந்தசாமியாரவர்கள் பதிப்பித்த சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகச் சொல்லதிகாரப் பதிப்பில், 'சாத்தனது என்னும் அஃறிணைப் படர்க்கை ஒன்றன்பாற்குறிப்பு வினைமுற்று, வினையாலணையும் பெயராகிச் சாத்தனதனை, சாத்தனதோடு, சாத்தனதனோடு எனப் பிறவுருபேற்கும். பிறவேற்றுமையுருபுகள் இங்ஙனம் வினைமுற்றும் பெயருமாகாமையின், பிற உருபேலாவெனஅறிக,' என அடிக் குறிப்புத் தந்திருப்பது கவனிக்கத்தக்கதாம்.

சேனுவரையருள்ளிட்டோர் சிலர் கொண்ட இவ்வுரையைக் கண்டு மயங்கி, நன்னூல், பெயரியல், 36-ஆம் நூற்பாவாகிய,

*'ஆறன் உருபும் ஏற்குமவ் வுருபே.'*

என்பதற்கு மயிலைநாதர்உளிட்டார் சிலர் இவ்வுரையையே கூறியுள்ளனர்.

தெய்வச்சிலையார் உரை :

'இது, பல உருபு தொடர்ந்தடுக்கியவழி வரும் வேறுபாடும் உருபு தொகுமாறும் உணர்த்துதல் நுதலிற்று.

'இறுதியும் இடையும் நின்ற எல்லா உருபும் முடிக்கும் வினை ஒன்றனோடு முடிதலேயன்றி, வேறு வினையோடு முடிதலும், அவ்வுருபுகள் தொக்கு நின்று முடிக்கும் சொல்லோடு முடிதலும் நெறிபட வழங்கிய பக்கத்தன என்று சொல்லுவர்.

'இறுதியும் இடையும்' என்பது மேலைச் சூத்திரத்தினின்றும் தந்துரைக்கப்பட்டது. 'நெறிபட வழங்கிய பக்கம்' என்ற பெயரான், ஏற்கும் வினையே கொள்ளப்படும், பிறிது பிறிதேற்றல் கூற வேண்டா; வேற்றுமையுருபு வினையோடு முடியும் என்பதனுற்பெறுதும்,' எனின், மேல் நின்ற அதிகாரம் பல உருபடுக்கிய வழி ஒரு வினையான் முடியும் என்றமையால், 'தனித்தனி வினை கொண்டு முடியவும் பெறுமோ !' என நின்ற ஐயம் தீர்த்தற்குக் கூறல் வேண்டும் என்க. 'ஈண்டு உருபு தொகுதல் கூறியதென்னை ? வேற்றுமைத் தொகையென எச்சவியலுட்கூறுகின்ருர். ஆதலின்,' எனின், தொகைச்சொல்லாவது, இறுதிப் பெயரோடு தொக்கு ஒரு சொல் நீர்மைப்பட்டு நிற்பது; இஃது அன்னதன்றித் தொகாநிலைத்

தொடர்ச்சிக்கண் உருபு மாத்திரம் தொக்கு நிற்கும் என்று கொள்க.

உதாரணம் :

*காதலியைக் கொண்டு கவுந்தி யொடுகூடி*
*மாதரிக்குக் காட்டி மனையின் அகன்றுபோய்க்*
*கோதில் இறைவனது கூடற்கண் கோவலன்சென்*
*றேத முறுதல் வினை.'*

இதனுள் பல உருபு பல வினையான் வந்தன, ஒரு வினையான் முற்றுப்பெற்றன.

உருபு தொக வருமாறு :

'நிலத்தைக் கடந்தான்; வாளால் வெட்டினன்; கொலைக்கு உடம்பட்டான்; வரையினின்றும் பாய்ந்தான்; சாத்தனது பொத்தகம்; மாடத்துக்கண்' இருந்தான் என்பன, 'நிலங்கடந்தான்; வாள் வெட்டினன்; கொலையுடம்பட்டான்; வரை பாய்ந்தான்; சாத்தன் பொத்தகம்; மாடத்திருந்தான்,' என உருபு தொக்க வழியும் ஒட்டுப்படாது நின்று தொகாநிலைத் தொடர்ச்சியாகிப் பொருள் பட்டவாறு[1] கண்டுகொள்க.

'தொகைச் சொல்லும், உருபு தொகைச் சொல்லும் வேறுபாடிலவாய் வரும் ஓசை வேற்றுமையான் வேறுபாடு அறிந்துகொள்க. 'பிறிது பிறிதேற்றல்' என்பதனை 'ஆறனுருபு ஏனையுருபேற்கும் எனப் பொருளுரைத்துச் சாத்தனதனை, சாத்தனதனோடு என உதாரணம்காட்டுபவால்' எனின், அவ்வாறு வரும் 'அது' என்பது உருபு நிலை ஒழிந்து பொருளாய் நிற்றலானும்; 'சாத்தனதனைக் கொணர்ந்தான்' என்றவழி இடை நின்ற 'அது' என்பது உருபாயின், 'சாத்தனைக் கொணர்ந்தான்' என்னும் பொருள்படல் வேண்டும்; அவ்

வாறு பொருள்படாது உடைப்பொருளேயே காட்டுதலானும், அஃறிணை ஒருமை 'அது' என்னும் பெயர்க்கு ஆதலானும், 'சாத்தன் பொத்தகத்தைக் கொணர்ந்தான்,' என்றாற்போல வந்ததல்லது. 'உருபு உருபேற்றல்' என்றல் அமையாது என்க.'

*'ஆறன் உருபும் ஏற்குமவ் வுருபே.'*

என்னும் நன்னூற்சூத்திரமும் இப்பொருள் நுதலியதே என்பதை நுண்மாண் நுழைபுலம் வாய்ந்த இராமனுச கவிராயர் கூறும் உரையால் தெளியலாம். அது பின் வருமாறு :

' எழுவாய் உருபு மற்ற உருபுகளையும் ஏற்கும் என்பது,' எனச் சூத்திரத்திற்குக் கொளுவமைத்து, 'இஃது எழுவாயுருபு மற்ற உருபுகளையும் ஏற்குமென்பது உணர்த்திற்று,' என நூற்பா நுதலியதைக் கூறி, 'ஆறன் உருபும் ஏற்கும்—ஐ முதலிய ஆறு உருபுகளையும் ஏற்கும், அவ்வுருபு—அந்த எழுவாய் உருபு என்றவாறு,' எனப் பதப்பொருள் கூறி, 'எனவே, விளியுருபு பெயரது விகாரமேயாதலால், எழுவாயுருபின் வேறன்று என்பது பற்றி அதனை நீக்கி, ஆறுருபும் ஏற்கும் என்றார் என்பதாயிற்று,' எனக்கூறி, 'இனி இச்சூத்திரத்திற்கு இவ்வாறு பொருள் கொள்ளாமல், 'ஆறும் வேற்றுமையுருபும் அவ்வுருபுகளை ஏற்கும்,' எனப் பொருள் கூறி, சாத்தனதை, சாத்தனதால், சாத்தனதற்கு, சாத்தனதனின், சாத்தனதனது, சாத்தனதன் கண்' என உதாரணம் காட்டுவாருமுளர். உருபேற்பது பெயர்க்குரிய இலக்கணமே அன்றி, வினைமுதலியவற்றிற்கு அன்றாதலானும், 'பெயர் வழி வரும் உருபு,' என்றும், 'எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய்' என்றும் வரையறை கூறியதனாலே, இங்கே இடைச்சொல் உருபேற்கும் எனின், அது மாறு

கொளக் கூறலாம் ஆதலானும், 'சாத்தனது, சாத்தனதை' என்பன, 'குழையது, கோட்டது,' என்ருற்போலத் 'து'வ்விகுதியையும் அகரச்சாரியையும் பெற்று நின்ற குறிப்பு வினையாலணையும் பெயராமாதலானும், பெயர் போலத் தனித்து நின்று உருபேற்றல் கூடாமையானும் அது பொருந்தாது என்க,' என விளக்கமும் தந்துள்ளார்.

எனவே, 'பிறிதுபிறி தேற்றலும்' என்னும் சூத்திரத்திற்குத் தெய்வச்சிலையார் உரையே பொருந்துவதென்பதை இராமானுச கவிராயரும் உடன்பட்டமை தெளிவாம்.

தொல்காப்பியத்தின் வழி வந்தனவே இறையனுர் களவியல், நன்னூல், புறப்பொருள் வெண்பாமாலை, யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, நம்பியகப்பொருள் உள்ளிட்ட ஏனைய இலக்கண நூல்கள் யாவும். தனக்கு முன்னெழுந்த நூல்களையெல்லாம் விழுங்கி ஏப்பமிட்டு, பின் வந்த நூல்களுக்கெல்லாம் பிறப்பிடமாய் அமைந்ததே ஒல்காப் புகழ் கொண்ட தொல்காப்பியம் என்பது தெளிவாம்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியற்பகுதிகள் பண்டைத் தமிழர் வாழ்க்கையின் வரலாற்றுப் பேழை எனக் கூறலாம்.

*'காமம் சான்ற கடைக்கோட் காலை*
*ஏமம் சான்ற மக்களொடு துவன்றி*
*அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்*
*சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே.'*

என்னும் புறத்திணையியற்சூத்திரம், வையத்து வாழ்

வாங்கு வாழ்வதன் பயனை வடித்துக் காட்டுவதெனக் கூறலாம். இது நிற்க.

இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் வகுப்பது மரபாதலின், தொல்காப்பியம் காட்டும் பண்டைத் தமிழர் பண்பாட்டை விளக்கும் இலக்கியங்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பல்கியிருத்தல் வேண்டும் எனக் கருதலாம்.

தமிழ்ச்சொற்களில் முதலாகெழுத்துகள் இவையெனவும், கடையாகெழுத்துகள் இவையெனவும், இடையில் மயங்கி வரல் மரபின இவையெனவும் தொல்காப்பியர் எடுத்துக் கூறியிருப்பது, பிறமொழிச் சொற்களை அறிந்து அகற்றுவதற்கும், ஏற்பனவற்றைத் தமிழ மொழியின் ஒலி நுட்பத்திற்கியைய எழுத்து மாற்றம் செய்து ஏற்றுக்கொள்வதற்கும் தகுந்த கருவியாம்.

மொழி முதலெழுத்துகளை விதந்தோதுங்கால் தொல்காப்பியர் காட்டும் நூற்பாக்களுள்,

*'சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே*
*அஐ ஔவெனும் மூன்றலங் கடையே,'*

என்னும் நூற்பாவும் ஒன்று. இந்நூற்பாவின்படி 'ச, சை, சௌ' என்னும் மூன்றும் ஒழிந்த ஏனைய சகர வருக்க எழுத்து ஒன்பதும் தமிழ்ச் சொல்லுக்கு முதலாகும் என்பது தொல்காப்பியர் கருத்து என்பதை அறிகிறோம்.

இந்நூற்பாவில் பாடபேதம் இருத்தல் வேண்டும் என்பது சிலர் கருத்து. அங்ஙனமாயின், இது

*' சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே*
*அவைஔ வென்னும் ஒன்றலங் கடையே'*

என அமைதல் வேண்டும் என்பது அவர் கருத்து. இப்பாடம் இதுகாறும் அச்சில் வெளி வந்த தொல்காப்பியப் பதிப்புகளிலோ, கிட்டிய ஏட்டுச் சுவடிகளிலோ காணப்படவில்லை. மேலும், 'அவை' என்னும் பன்மைச் சுட்டு, 'அவற்றோரற்றே' என்னும் அஃறிணை ஒன்றன்பாற்குறிப்பு முற்றோடு இயையுமா? அங்ஙனம் பிழைபடத் தொல்காப்பியர் சூத்திரம் இயற்றுவரா? இவற்றைச் சிந்திக்க வேண்டும்.

பாட்டிலும் தொகையிலும் பயின்று வந்த சொற்களுள் 'சகடம், சங்கடம், சடை, சண்பகம், சண்பு, சதுக்கம், சந்தி, சந்து, சமம், சமழ்ப்பு, சரணத்தர், சலம், சவட்டுதல்' என்னும் சகரமுதற்சொற்களும்; 'சையம்' என்னும் மலையைக் குறிக்கும் சொல்லும் காணப்படுவதை அவர் தம் துணிவிற்குச் சான்றாகக் காட்டுவர். இச்சொற்கள் வடசொல்லும் திசைச்சொல்லுமாகக் கொள்ளுதற்கு இடமுண்டு. 'சமழ்ப்பு' என்னும் சொல் தமிழுக்குரிய சிறப்பெழுத்தாகிய ழகர மெய் பெற்றதாயினும், அது பாகதச் சிதைவு என்பர் அறிஞர்.

*' வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ*
*எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே!*
*' சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்.'*

என்னும் எச்சவியற்சூத்திரங்கள் (5, 6) இங்குக் கருதத்தக்கன. தொல்காப்பியருக்கு முற்பட்ட இலக்கியங்களிலும் 'ச, சை, சௌ' என்னும் எழுத்துகளை

முதலாக உடைய சொற்கள் தமிழில் வழங்காமை யைத் தொல்காப்பியர் ‘முந்து நூல் கண்டு முறைப் பட எண்ணியே’ சூத்திரம் யாத்திருத்தல் வேண்டும் என்பது ஒருதலே. இது நிற்க.

சொல்லில் ஆய்தம் அமைந்து ஒலித்தற்குரிய மரபை உணர்த்த வந்த தொல்காப்பியர், ஒலி நுட்பத்தை ஓர்ந்து ஆய்ந்த உயர்மொழிப் புலவ ராதலின்,

*‘ குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி*
*உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே.’*

என நூற்பாவை அமைத்துள்ளார். இதற்கு மாருக இன்று அயன்மொழிச் சொற்களே எழுதுங்கால் France, French என்பன போன்ற சொற்களே முதலில் ஆய்தவெழுத்தையிட்டு, ‘ஃப்ரான்ஸ்’ ‘ஃப்ரெஞ்ச்’ என எழுதத் தொடங்கியுள்ளனர். இஃது இரண்டுங்கெட்ட நிலேயென்பதை விளக்கவேண்டா வெனக் கருதுகிறேன். ‘தொல்காப்பியன்றன் ஆணே யின் தமிழறிந்தோர்க்கு’ இது கடனுகாது எனக் கருதுகிறேன்.

## ஆராய்ச்சிப் பதிப்புகளின் இன்றியமையாமை

தொல்காப்பியங்கற்பார் உரைகளேக் கற்கும் போது அவ்வுரைநடை இனிது விளங்காமையாற் பெரிதும் இடர்ப்படுவதைக் காண்கிறோம். இக் குறை நீங்கப் பிழையற்ற எளிய உரை நடையில் முழுநூலுக்கும் புத்துரையெழுதி வெளியிடுவது

சாலப் பயன் தரும் காலத்தொடியைந்த செயலாகு மெனக் கருதுகிறேன்.

உரைச்சிதைவு :

ஒரு சூத்திரத்திற்கு அமைந்த உரையைப் பதிப் பித்தோர் சிதையச் செய்திருப்பதைக் காண்போம்:

*'அளபெடை மிகூஉம் இகர விறுபெயர்*
*இயற்கைய வாகும் செயற்கைய என்ப.'*

என்பது இகர ஈற்று அளபெடைப்பெயர் விளியேற்கு மாற்றைக் கூறுகின்றது. இதற்கு இளம்பூரணர் உரை பின் வருமாறு அமைந்துள்ளது :

'இச்சூத்திரம் இகரம் ஈருயின், இயல்பாயே விளியேற்கும் என்றவாறு.

'வரலாறு : தொழீஇ என வரும். பெயர் நிலை யும் விளி நிலையும் அதுவே நிற்குமாறு.

'இனிச் 'செயற்கைய' என்றதனால், இரண்டு மூன்று மாத்திரை பெற எழுதுவாரும், ஐந்து மாத் திரை பெற எழுதுவாரும், என இரு திறத்தார் ஆசிரியர் என உணர்க.'

சேனாவரையர் உரை :

'அளபெடை தன்னியல்பு மாத்திரையின் மிக்கு நான்கும் ஐந்தும் மாத்திரை பெற்று நிற்கும் இகரவீற்றுப் பெயர், இ ஈயாகாது இயல்பாய் விளியேற்கும் செயற்கையை உடையவாம் என்ற வாறு.

'அளபெடை மிக்கு இயற்கையவாகும் செயற் கைய' என்னுது, 'மிகூஉம் இகர விறுபெயர்' என அனுவதித்தாரேனும், மாத்திரை மிக்கு இயல்பாம் என்பது அதனாற்பெறப்படும்.

'உதாரணம்: தோழீஇஇ எனவும், தோழீஇஇஇ எனவும் வரும்.

'இ ஈயாகாமையின், 'இயற்கையவாகும்' என்றும், மாத்திரை மிகுதலாகிய செயற்கையுடைமையால், 'செயற்கைய' என்றும் கூறினர்.

'இகரவிறுபெயர்' என்றது, 'இகரத்தான் இற்ற பெயர்' என விரியும்.'

தெய்வச் சிலையார் உரை :

'இகரவீற்றுக்கண் வருவதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

'அளபெடை மிக்க இகரவீற்றுப் பெயர் இயற்கையவாகிய செய்தியையுடைய' என்றவாறு.

'உ - ம். தோழீஇ என்பது, விளிக்கண்ணும் அவ்வாறே வரும். 'செயற்கை' என்றதனுன், விளிக்கண் வரும் ஓசை வேறுபாடு அறிந்துகொள்க.

நச்சினர்க்கினியர் உரை :

'அளபெடை தன் இயல்பு மாத்திரையின் மிக்கு நான்கு மாத்திரை பெற்று நிற்கும் இகரவீற்றுப் பெயர், இ ஈயாகாது இயல்பாய் விளியேற்கும் செயற்கையை உடைய என்று கூறுவர் ஆசிரியர்,' என்றவாறு.

'உ - ம். தொழீஇஇ !

என வரும். தொழீஇஇஇ என . ஐந்தெழுத்தும் இட்டு எழுதுப.

' 'இகர ஈற்றுப் பெயர்' எனவே, நெட்டெழுத்து அளபெடுத்தது அன்று ; குற்றெழுத்தே நின்று மாத்திரை பெற்றது என்று உணர்க. இது 'தொழில் செய்கின்றவளே !' என்னும் பொருள் தந்து நிற்பதோர் சொல்.'

இங்குக் காட்டிய 'தொழீஇ' என்னும் சொல்லின் உண்மை வடிவை அறியாத ஏடெழுதுபவர்கள் 'தோழீஇஇஇ' எனவும், 'தொழிலீஇஇஇஇ' எனவும் பிழைபட எழுதினர்கள். 'நான்கெழுத்தும் ஐந்தெழுத்தும் இட்டு எழுதுப,' என்னும் உரை விளக்கத்தை உணராத ஏடெழுதுவோர், 'நான்கெழுத்தும் ஐந்தெழுத்தும்' என்றதை அளபெழுந்ததற்கு அறிகுறியாக எழுதிய எழுத்தெனப் பிறழ உணர்ந்து, நான்கும் ஐந்தும் இகரம் இட்டுப் படியெடுத்ததாலும், 'தொழீஇ' என்னும் சொல் வடிவமும் பொருளும் அறியாமையால், 'தோழீஇ' என்றும், 'தொழிலீஇ' என்றும் எழுதிப் படித்ததாலும் நேரிட்ட பிழையென்பதை உணராமையால் வழுவிய இப்பாடம் அச்சில் இடம் பெறலாயிற்று என்பது புலனுகும்.

ரகர ஈற்று உயர்திணைப்பெயர் விளியேற்கு மாற்றை விளக்கும் நூற்பா, 'ஆரும் அருவும் ஈரொடு சிவணும்,' என்பது. இதற்கு உரை கண்ட இளம்பூரணர் உள்ளிட்டார், 'பார்ப்பார்—பார்ப்பீர்! கூத்தர்—கூத்தீர்' என எடுத்துக்காட்டும் எழுதினர். தெய்வச்சிலையார், இவற்றுடன் 'உடையர்—உடையீர்' எனக்குறிப்பு வினையாலணையும் பெயர் விளியேற்றலையும் குறித்துள்ளார். இம்முறையைப் பண்டையோர் செவ்விதின் உணர்ந்து தாம் இயற்றிய இலக்கியங்களில் ஆண்டிருப்பதைத் 'தெரிதரக் கேட்ட திருத்தகு நல்லீர்!' எனவும், 'ஏகீர் நாய்கீர்!' எனவும் வரும் இலக்கிய ஆட்சிகளால் அறியலாம். இம்மரபை மனங்கொள்ளாதார் சிலர், 'அன்பரீர்,

நண்பரீர், அம்மையாரீர்' என எழுதுவதைக் காண்கிறோம். சேனாவரையர் இச்சூத்திரத்திற்கு, 'ரகாரவீற்றுள் 'ஆர், அர்' என நின்ற இரண்டும் 'ஈராய்' விளியேற்கும்,' எனக் கூறிய உரையில் 'ஈர் ஆய்' என விளங்கக் கூறியதை மனங்கொளல் வேண்டும். பண்டையோர் உரைத்த தண்டமிழ் மரபைப் பின் பற்றாது எழுதும் முயற்சியால் பல வகை மரபு வழுக்கள் மொழியிற்புகுந்து மாசுபடுத்துவது காணலாம்.

பண்டை நூல்களையும் உரைகளையும் பயிலும் மாணவர்களுக்கு விளங்காவெனக் கருதும் உரைப் பகுதிகளை மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் தெளிவுற விளக்கும் பொறுப்பை மேற்கொள்ள வேண்டும். பண்டை நூல் உரைகளைப் பயில்வது எளிய செயலன்று.

## ஏடும் எழுத்தாணியும்

பண்டைச்சுவடிகள் பலவும் அகன்ற பனையேட்டில் எழுதப்பட்டவை. எனவே, எழுதுபவரின் கைத் திறத்திற்கேற்ப, எழுத்தின் வடிவம் அமையும். எழுத்துகளுக்குரிய வடிவங்கள், சிலவற்றிற்செவ்வனே அமைந்திருக்கும்; சிலவற்றிற்சங்கிலித் தொடர் போல அமைந்திருக்கும். மெய்யெழுத்து களுக்குப் புள்ளியிடுவதில்லை. பல புள்ளிகள் ஒரு வரியில் அமையுமாயின், ஏடு கிழியும். எனவே,

*'மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்.*
*'எகர ஒகரத் தியற்கையும் அற்றே,'*

எனத் தொல்காப்பியம் வகுத்த நெறி செயன்முறையில் ஏடெழுதுவோரால் மேற்கொள்ளப்படவில்லை. எகர ஒகரமும் அவையூர்ந்து வரும் உயிர்மெய்யும் குறிலா நெடிலா என்றறிவது, அக்காலத்தில் எளியதாயிருந்திருக்கலாம். பிற்காலத்தில் இதனல் விளைந்த இடையூறுகள் பல. பாட பேதங்கள் எண்ணற்றவை நூல்களில் இடம் பெற்றமைக்குக் காரணம் இதுவே. காலும்(ா) இடையின ரகரமும் ஒன்ருேடொன்று மாருடும். எனவே, தொல்காப்பியம் என்னும் சொற்ருெடரைத் 'தோல் காப்பியம்' எனவும், 'தொரல காப்பியம்' எனவும் படிக்க நேரலாம். 'போரவை' என்னும் சொற்ருெடர், 'போர்வை' எனவும் 'பொரவை' எனவும் படிக்கப்பட்டதும் உண்டு. பகர யகரங்கள் மாருடுவதும் உண்டு. இதனல், யாப்பருங்கல விருத்தியில் 'யுவமத்திமம்' என்னும் வடமொழிச் சிதைவு 'பவமத்திமம்' எனப் படி செய்யப்பட்டு அச்சேறியதைப் பார்க்கிருேம். 'பாரி யுறநாட்டுப் பெண்டிர்' என்பது 'பாரி பறநாட்டுப் பெண்டிர்' எனப் படி செய்யப்பட்டு அச்சேறிவிட்டது. 'பறநாடு' என்பது 'பறம்பு நாடு' என்பதன் மரூஉவெனக் கருதி, அதற்குப் 'பறம்பு நாடு' என்றே பொருள் கூறியவர்களும் உண்டு. இதற்கு மேற்கோளாக, அகநானூற்றின் 323ஆம் பாடலைப் பாடிய பறநாட்டுப் பெருங்கொற்றனர் என்னும் புலவர் பெயரும் காட்டப்பட்டது. இது காகதாலிய நியாயமாய் அமைந்த ஒப்புமையே தவிர உண்மையன்று. தஞ்சாவூரும் தஞ்சாக்கூரும் ஒன்ருகுமா ? ஒன்றை மற்ருென்றன் மரூஉவெனக் கொள்ளலாமா ?

*‘நறுநீல நெய்தலும் கொட்டியும் தீண்டப்*
*பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி*
*யறநாட்டுப் பெண்டிர் அடி’*

என்னும் பழைய பாடல் யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கல விருத்தி, வீரசோழிய உரைகளில் இன்னிசைச் சிந்தியல் வெண்பாவுக்கு மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது. ‘பாரியறநாடு’ என்னுந்தொடரில் உடம்படு மெய்யாய்த் தோன்றிய யகரம் பகரமாகப் படி செய்யப்பட்டதால் நேர்ந்த பிழை இது. பாரி நாட்டை ‘அறநாடு’ என்னும் குறியீட்டால் வழங்கிய புலவர் பெருமான் கருத்துப் பாராட்டுக்குரியது. ஏடெழுதுவோரால் தகர நகர றகரங்கள் ஒன்றுக்கொன்று மாருடப் படி செய்யப் பட்டதால் நேர்ந்த இடர்ப்பாடுகள் பல. அவை விரிப்பின் பெருகும். ஆயினும், ஒன்று காட்டி அமைவேன் :

கம்பராமாயணத்தில் பால காண்டம் நகரப் படலத்தில் கம்பர் அகழியை வருணிக்கும் பாடல்,

*‘அன்னமா மதிலுக் காழிமால் வரையை*
*அலைகடல் சூழ்ந்தன அகழி*
*பொன்விலை மகளிர் மனமெனக் கீழ்ப்போய்ப்*
*புன்கவி யெனத்தெளி வின்றிக்*
*கன்னிய ரல்குந் தடமென யார்க்கும்*
*படர்வருங் காப்பின தாகி*
*நன்னெறி விலக்கும் பொறியென எறியும்*
*கராத்தது நவிலலுற் றதுநாம்.’*

என்பது. இதில் மூன்றும் அடியில் வரும் ‘கன்னிய ரல்குந் தடமென’ என்னும் உவமை, ஏடெழுது-

வோரால் 'கன்னிய ரல்குற் றடமென' எனப் பிழை படப் படிசெய்யப்பட்டதாற் பொருட்சிதைவு ஏற்பட்டுள்ளமையை இதுகாறும் வெளிவந்துலவும் இராமாயணம் பால காண்டப் பதிப்புகளிற்காணலாம். 'அல்குதல்' என்னும் சொல் 'தங்குதல்' என்னும் பொருளது. நாட்டில் தங்கியுள்ள குடி மக்களை 'அல்குநர்' எனக் கலித்தொகை 23ஆம் பாடல் குறிப்பதைக் காணலாம். எனவே, 'கன்னியர் அல்குந்தடம்' என்பது அரசிளங்கன்னியர் தங்கியிருக்கும் கன்னிமாடத்தையுணர்த்துவதை அறியலாம். 'கன்னிக் கடிநகர் பொன்னிலத் தொதுங்கி' எனவும், 'கன்னி மாடம்' எனவும், 'கன்னியங் கடிநகர்'எனவும், 'கன்னியங் கடிமனை' எனவும் வரும் பெருங்கதை ஆட்சிகள் இங்குக் கருதத்தக்கன. 'நகர்' என்னும் சொல் பண்டைத் தமிழில் அரண்மனை என்னும் பொருளில் வழங்கியதும் கருதத் தக்கது.

வகரமும் மகரமும் அடுத்தடுத்து எழுதப்பட்டு அவை வைகயெனப் படி செய்யப்பட்டதால், 'சாதுவ மாந்தர்' என்பது இராமாயணத்தில் 'சாதுகை மாந்தர்' எனப் பதிப்பிக்கப்பட்டுப் பொருளாய்வார்க்குப் பெருந்தொல்லை விளைத்துள்ளது.

*'மாதர்கள் கற்பின் மிக்கார்*
*கோசலை மனத்தை யொத்தார்;*
*வேதியர் வசிட்ட னொத்தார்;*
*வேறுள மகளி ரெல்லாம்*
*சீதையை யொத்தார்; அன்னாள்*
*திருவினை யொத்தாள்; அவ்வூர்ச்*
*சாதுவ மாந்த ரெல்லாம்*
*தயரதன் றன்னை யொத்தார்.'*

என்பது கம்பராமாயணம், அயோத்தியா காண்டம், கைகேசி சூழ்வினைப் படலம், 66ஆம் செய்யுள்.

இச்செய்யுள் இராமன் முடி புனைதலைக் கேள்வி யுற்ற மக்கள் கொண்ட மகிழ்ச்சியை உவமை நயந் தோன்ற வருணித்துக் காட்டுவது. இதன் இறுதியடி 'சாதுத்தன்மையுடைய பெரியார் அனைவரும் தயரத மன்னனைப் போல மகிழ்ந்தனர்,' என்னும் பொருளது. 'சாதுவர்' என்னும் சொல்லாட்சியை,

*" திறம்பேன்மின் கண்டீர் திருவடிதன் நாமம்*
*மறந்தும் புறந்தொழா மாந்தர்—இறைஞ்சியும்*
*சாதுவராய்ப் போதுமின்கள்,' என்றான் நமனுந்தன்*
*தூதுவரைக் கூவிச் செவிக்கு."*

என்னும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், இயற்பா—நான்முகன் திருவந்தாதி, 68ஆம் செய்யுளிற்காண லாம். 'தத்துவன் சாதுவன்' (சிலப்பதிகாரம் 10 : 182) என்னும் ஆட்சியும் இதனை வலியுறுத்தல் காணலாம். 'சாதுவர்' என்னும் சொல்லையே கம்பநாடர் 'சாதுவ மாந்தர்' என விரித்தோதினார். இச்சொற்றொடர் 'சாதுகை மாந்தர்' எனப் பிழைபடப் படி செய்யப் பட்டதால், 'சாதுகை' என்னும் பொருளற்ற சொல், சென்னைப் பல்கலைக் கழகச் சொல்லகராதியிலும் இடம் பெற்றுவிட்டதைக் காண்கிறோம். ('சாதுகை Catukai, n. perh. satvika. see சாத்துவிகம். சாதுகை மாந்தரெல்லாம் (கம்பரா, கைகேசி, 66)' என்பது அகராதி தரும் விளக்கம். 'perhaps' என் னும் ஐயப்பொருள்படும் ஆங்கிலச் சொல் இச் சொல்லைப் பற்றி அகராதிக் குழுவினர் கொண்ட

ஐயத்தை விளக்கும். இச்சொல்லைப் பற்றி மதுரைத் தமிழ்ச்சங்கம் வாயிலாக வெளி வரும் 'செந்தமிழ்' இதழில் பல ஆண்டுகளுக்கு முன் ஆராய்ச்சிகள் வெளி வந்திருப்பதைப் பலர் அறிவர்.

ஐகார ஔகாரங்களுக்கு மாத்திரை விதிக்கும்

*'அளபெடை தனியிரண் டல்வழி ஐயௌ*
*உளதாம் ஒன்றரை: தனியுமை யாகும்.'*

என்பது, அவிநயச் சூத்திரம். இச்சூத்திரத்தில் 'தனியுமை யாகும்' என்றது, 'ஐகாரம் மொழி முதலாகுங்கால் ஒன்றரை மாத்திரையும், மொழியிடை கடைகளில் அமையுங்கால் ஒரு மாத்திரையும் பெறும்,' என்னும் பொருள்படும். 'தனி' என்பது ஒரு மாத்திரையைக் குறித்து நின்றது, 'தனி மனிதன், தனி மரம்' என்றாற்போல. 'தனியுமை யாகும்' எனவே, 'ஔ' ஆகாது என்பது பெறப்பட்டது, ஔகாரம் தமிழ்ச்சொல்லின் இடையிலும் கடையிலும் நில்லாது ஆதலின். 'தனியுமை யாகும்' என்பது, ஏடெழுதுவோரால் 'தனிமையு மாகும்' என எழுத்துப் பிறழப் படி செய்யப்பட்டதால், அச்சிட்ட நூல்களிலெல்லாம் அந்த வடிவத்திலேயே இறவா வரம் பெற்றிருத்தலை அறியலாம்.

இங்ஙனம் ஏடெழுதுவோராற் பிழையாகப் படி செய்யப்பட்டு அச்சேறி ஆட்சி புரியும் சொற்களும் தொடர்களும் பற்பல. அவை விரிப்பின் பெருகும்; ஆதலின், அவற்றை விடுத்து மேற்செல்வேன்.

அந்நாளில் ஓர் ஏட்டுச்சுவடியை எழுதுவித்துப் பெறுவது அருமுயற்சியும் பெருஞ்செலவும் மேற்

கொள்ள வேண்டிய செயலாகும். கையிலுள்ள ஏட்டை இழந்துவிட்டால், வேறு படியெழுதிப் பெறுவது பகீரத முயற்சியாமாதலின், எவரும் ஏட்டை இரவல் தர இசைவதில்லை. இது கருதியே, 'பாடை ஏறினும் ஏடது கைவிடேல்,' என்னும் பழமொழி கடுங்கட்டளை விதித்தது. தமிழில் 'பாடை' என்னும் பல பொருள் குறிக்கும் ஒரு சொல், ஆரிய மொழிச் சொல்லாகிய 'பாஷா' என்னும் சொல்லின் தற்பவமாய், இங்குப் 'பிணக்கட்டில்' என்னும் பொருளை ஒழித்து, 'மொழி' என்னும் பொருளைத் தந்து நின்றது. 'மொழிப் பயிற்சியில் ஏற்றம் எய்திய பின்னும், அதற்குக் கருவியாய் அமைந்த ஏட்டைக் கைநழுவ விடாதே,' என்பதை இப்பழமொழி உணர்த்துகின்றது.

ஓர் ஏட்டுச் சுவடியின் முகப்பேட்டில் 'இந்தப் பொத்தகத்தை உத்தரவின்றித் திருடிச் செல்பவர், காசிக்குச் சென்று கங்கைக்கரையில் காராம்பசுவைக் கொன்ற பாவத்துக்கு உரியவராவர்,' என்னும் வாக்கியம் எழுதப்பட்டிருந்தது. இஃது அந்நாளில் ஏட்டுச் சுவடிக்கிருந்த பெருமதிப்பைக் காட்டுகின்றது. இது நிற்க.

## பதிப்பாசிரியர்களின் அரிய தொண்டு

தமிழ் நூற்பதிப்பாசிரியர்களைப் பற்றி நினைக்கும் பொழுது நம் மனக்கண்முன் வந்து நிற்கும் பெருமக்களுள் ஒருவர் யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பேரறிஞர் **ராவ்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை**

யவர்கள். இவர் தொல்காப்பியம், இலக்கண விளக்கம், இறையனுர் அகப்பொருள், வீரசோழியம், கலித்தொகை, சூளாமணி உள்ளிட்ட பல நூல்களைப் பெரிதும் உழைத்துப் பதிப்பித்தார். பின்னுளில் வெளி வந்த திருத்தப் பதிப்புகளுக்கு அடிப்படை வகுத்துக் கொடுத்த பெருமை இப்பெரியாருக்குரியது. நீதியந் தலைவர் பதவியிலிருந்த இப்பெரியார், தமிழ் மொழி யிடத்தும் தமிழ்ப்புலவரிடத்தும் காட்டிய பெரு மதிப்பு, அக்காலத்துத் தமிழ் நாடிருந்த சோர்வு நிலையில், பெரிதும் பாராட்டத் தக்கது. இப்பெரி யாருக்கு அணுக்க நண்பராயிருந்தவர் பேராசிரியர் அருங்கலைச் செல்வர் வி. கோ. சூரிய நாராயண சாத்திரி யாராவர். அவர் இரு மொழியறிந்த பெரும்புலவர்; நாடகவியல் முதலிய நயத்தகு நூல்களின் ஆசிரியர்; சங்கப் புலவருக்கொப்பாகத் தண்டமிழ்க் கவிதை புனையும் ஆற்றல் வாய்ந்தவர். அப்பெரியார், அறி ஞர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் 1901ஆம் ஆண்டு, சனவரித் திங்களில் இயற்கை எய்திய மைக்கு ஆற்ருது பாடிய கையறுநிலைச் செய்யுள், பிள்ளையவர்களிடத்து அவர் கொண்டிருந்த பெரு மதிப்பைக் காட்டுகிறது. அச்செய்யுள்,

*‘ காமோதி வண்டர் கடிமலர்த்தேன்*
*கூட்டுதல்போல்*
*நாமோது செந்தமிழின் நன்னூல்*
*பலதொகுத்த*
*தாமோ தரம்பிள்ளை சால்பெடுத்துச்*
*சாற்றளவர்*
*தாமோ தரமுடையார் தண்டமிழ்ச்செந்*
*நாப்புலவீர்!’*

என்பது.

பிள்ளையவர்களையடுத்து நம் உள்ளக் கண்ணுக்குக் காட்சியளிக்கும் பெருந்தகையார், சென்னையம்பதிக் கடற்கரையில், சென்னை மாநிலக் கல்லூரியின் முன் கடலை நோக்கி, 'உவர்க்கடலே, யான் சுவைத்துத் திளைத்த அமைதியே உருக்கொண்ட தீந்தமிழ்க்கடலுக்கு ஆர்கலியாகிய நீ ஒப்பாவாயோ?' என வினவுவார் போல உருநிலையில் நிற்கும் உத்தமதானபுரம் பெரும் பேராசிரியர்—மூதறிஞர்-தமிழ்க் கலைக்கருவூலம்-உ. வே. சாமிநாத ஐயரவர்கள். இவர் தமிழுக்குச் செய்த சால்புடைத்தொண்டு உலகமறிந்தது. சங்க நூல்களும் பிறநூல்களுமாகிய பலவற்றை—பரணில் நெடுந்துயில்கொண்டு எலிகளுக்கும் அந்துக்கும் செல்லுக்கும் இரையாகும் நிலையில் இருந்தவற்றை—அரிதின் முயன்று மீட்டு, அல்லும் பகலும் இடையறுது ஆய்ந்து, செவ்விய முறையிற் பதிப்பித்துச் சீரிய சிங்காதனத்திலிருத்திச் செங்கோல் ஓச்சச் செய்த செப்பரும்பெருமை ஐயரவர்களுக்குரியதாகும். ஐயரவர்களின் '**என் சரித்திரம்**'என்னும் இனிய நூலின் முன்னுரையில், அவர்கள் மாணவமணியாகிய பெரும் புலவர் கி. வா. ஜகந்நாத ஐயரவர்கள் பின் வருமாறு எழுதியிருப்பது எண்ணத்தில் இருத்துதற்குரியது:

"ஐயரவர்களுடைய பதிப்பைப் பற்றிச் சொல்லப் புகுந்தால், எவ்வளவு வேண்டுமானுலும் சொல்லிக்கொண்டே போகலாம்; நிறைந்த புலமை, உண்மையைக் காண வேண்டும் என்ற ஆர்வம், இடைவிடாத உழைப்பு, எதனை ஆராய்ந்தாரோ

அதன் மையமாய் நின்று தம்மை மறந்து ஒன்றிய இயல்பு, தமக்கு நன்ருகத் தெளிவு பிறக்கும் வரைக்கும் மனநிறைவு பெருமல் மேலும் மேலும் முயலும் முயற்சி, நேர்மை—இத்தனையும் இணைந்தமையால், இவர் சிறந்த பதிப்பாசிரியராக விளங்கினர். மிகப் பழைய விரிந்த கண்டம் ஒன்றுக்கும் விரிந்துகொண்டு வரும் மற்ருெரு கண்டத்துக்கும் இணைப்புப் பாலம் போடும் வேலை, இவர் ஆற்றிய வேலை. ஓலைச் சுவடிகள் மறைந்து அச்சுப்புத்தகம் வந்த காலம் இது. சுவடிகளை ஆராய்ந்து புத்தக உருவிலே கொடுக்கவேண்டியிருந்தது. சங்க நூல்கள் மறைந்து போகப் பிற்கால நூல்களே வழக்கில் இருந்த காலம்; எதையும் உரைநடையில் எழுத வேண்டும் என்று வற்புறுத்தும் காலம். இந்தக் காலத்துக்குப் பயன்படும் வகையில் தெளிவும் விளக்கமும் உடைய பதிப்புகளை இவர் வழங்கினர். ஏட்டுச் சுவடியில் இருந்ததை அப்படியே மாற்றி அச்சிட்டுவிடும் எளிய வேலை யன்று இது. பல காலமாக ஏடு எழுதுவோர்கள் செய்த வழுக்கள் சுவடியில் ஏறியிருக்கும். செய் யுளின் உருவமே தெரியாது. இடையில் வழக்கு ஒழிந்தமையால், பல பகுதிகளுக்குப் பொருளே தெரியாது. அந்தக் காட்டுக்குள் புகுந்து, உண்மை தெளிய வேண்டும்; அதற்குத் துணைக்கருவிகளும் இல்லை. பிற்கால நூல்களைப் படித்த அறிவைக் கொண்டு சங்கச்செய்யுளுக்கு உரைகாண இயலாது. அது தனி உலகம். அப்படியிருந்தும், ஆராய்ச்சிப் பெரும்புலவருடைய கூரிய அறிவு அந்த உலகில் புகுந்து வழி கண்டது ; பிறருக்கும் வழி காட்டியது.

"ஐயரவர்களுக்குத் தமிழையன்றி வேறு மொழி சிறிதும் தெரியாது. ஆயினும், இவருடைய பதிப்பு அந்தக் காலத்திலேயே ஆங்கிலேயரும் பாராட்டும் வகையில் அமைந்துள்ளது. இவருடைய பதிப்பு நூலைத் திறக்கும்போதே முதலில் முகவுரை இருக்கும். அந்த நூலைப்பற்றிய செய்திகளும், ஆசிரியரைப்பற்றிய செய்திகளும், ஏட்டுச் சுவடி கிடைத்த வரலாறும் அம்முகவுரையிற்காணலாம். தமக்கு உதவி செய்த அன்பர்களுக்கு நன்றி கூறும் பகுதி இறுதியில் இருக்கும். நூலின் மூலத்தைத் திருத்தமாகப் பதிப்பித்து, அடியில் குறிப்புகளும், ஒப்புமைப் பகுதிகளும், மேற்கோளாக வந்த இடத்தைப் பற்றிய குறிப்புகளும், பாட பேதங்களும் அமைத்திருப்பர். நூலின் இறுதியில் அரும்பதம் முதலியவற்றின் அகராதி இருக்கும். ஐயரவர்களுடைய பதிப்புகளில் உள்ள முகவுரைகளைப் படித்தே ஒருவன் புலவனாகிவிடலாம் என்று பலர் சொல்வதுண்டு. அப்படியே ஐயரவர்களின் அடிக்குறிப்புகளையும் அரும்பத அகராதியையும் வைத்துக்கொண்டே ஆராய்ச்சி செய்து பெரிய ஆராய்ச்சியாளராகிவிடலாம்."

பெரும்புலவர் கி. வா. ஜகந்நாத ஐயரவர்கள் பல்லாண்டு ஐயரவர்களுடன் நெருங்கிப் பழகியவராதலால், அவர் வாய்மொழி வாய்மையேயாகும் எனக் கருதியே அவரது கருத்தை இங்கு அப்படியே எழுதினேன்.

நச்சினார்க்கினியர் உரையுடன் கூடிய பத்துப் பாட்டும், எட்டுத்தொகை நூல்களுள் குறுந்தொகை,

ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு என்னும் ஐந்து நூல்களும், சிந்தாமணியும், சிலப்பதிகாரமும், மணிமேகலையும், நன்னூல் மயிலை நாதர் உரையும், சங்கர நமச்சிவாயப் புலவர் உரையும், சில புராணங்களும், சிறு பிரபந்தங்களும் அழகுறப் பதிப்பித்ததுடன் பல உரைநடை நூல்களையும் ஐயரவர்கள் எழுதி வெளியிட்டுள்ளார்கள்.

ஐயரவர்கள் எழுதிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் வாழ்க்கை வரலாறு, ஆங்கில மொழியில் பாஸ்வெல் என்பவர் எழுதிய ஜான்ஸன் வரலாற்றுடன் ஒப்பிட்டுக் கூறத்தக்க உயர்வுடையது. ஐயரவர்களின் வரலாருகிய 'என் சரித்திரம்' நன்னடையில் அமைந்த சுவை மிகுந்த நூல்.

அடுத்துக் குறிப்பிடத்தக்கவர்கள் ஔவை சு. துரைசாமிப் பிள்ளையுள்ளிட்ட பதிப்பாளர் சிலராவர். இவர்கள் பதிப்புத் தொண்டைச் சிறப்புற ஆற்றி வருகின்றார்கள்.

ஆங்கிலேயரின் ஆட்சியில் முகிழ்த்த அச்சுக் கலை நாளுக்கு நாள் வளர்ந்தோங்கி அளப்பரும் பெருநலம் பயந்து வருவது கண்கூடு.

மறைந்த மாபெரும்புலவர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள், பன்மொழிப் புலமையுடையவர்கள். அவர்களால் ஆராய்ந்து பதிப்பிக்கப்பட்ட நூல்கள் பல. அவற்றுள் புறத்திரட்டுப் பதிப்புப் பலராலும்

பாராட்டப்படுவது. அவர்கள் எழுதி வெளியிட்டுள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகளும் பலவாகும்.

## மறைந்த புதையல்கள்

சங்க காலத்து நூல்களுள் முதற்சங்கத்தும் இடைச்சங்கத்தும் எழுந்த நூல்கள், பலவும், கடல் கோளும் பிறவும் காரணமாக இருந்த இடம் தெரியாமல் மறைந்தொழிந்தன. நம் நற்பேறு காரணமாகத் தொல்காப்பியம் ஒன்றே முழுநூல் வடிவில் நமக்குக் கிட்டியுள்ளது ; அதுவே, அக்காலத் தமிழரின் கலை வாழ்வை நமக்கு உணர்த்துங்கருவியாய் அமைந்துள்ளது.

கடைச்சங்க காலத்தெழுந்த பாட்டும் தொகையும், ஆராய்ச்சிக்குக் கருவூலங்களாய்த் திகழ்கின்றன. பிற்காலச் சான்றோர்களின் நூல்களாகிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் அக்கால வழக்க ஒழுக்கங்களை 'அகம், புறம்' என்னும் பாகுபாடுகளில் அமைத்தளித்து நமக்குப் பெருநலம் பயந்து வருகின்றன.

மறைந்த புதையல்களின் சின்னங்கள், பேருபகாரிகளாகிய உரையாசிரியர்களின் உரைகளில் எடுத்துக்காட்டுகளாய் அமைந்து, இலைமறை காய்கள் போலக் காட்சியளிக்கின்றன. அவற்ருல், அவை இடம் பெற்ற நூல்களின் பெயர்களும் நமக்கு விளங்குகின்றன. அப்பாடல்கள் பல்வேறு காலங்களில் பாடப்பட்டன போலத் தோன்றுகின்றன.

வித்துவான் மு. இராகவையங்காரவர்கள் அவற்றுள் 2,214 செய்யுள்களைத் தொகுத்துக் குறிப்புரை

யுடன் பெருந்தொகையெனப் பெயரிட்டு வெளியிட்டார்கள். இந்நூல் கடவுள் வாழ்த்து, அறவியல், பொருளியல் என்னும் பாகுபாட்டையுடையது. இது விசேடக்குறிப்பு, செய்யுட்குறிப்பகராதி, பொருட்குறிப்பகராதி, மேற்கோளாக எடுத்தாண்ட நூல் அட்டவணை என்னும் பிற்சேர்க்கையுடன் பதிக்கப்பட்டுள்ளது. ஐயங்காரவர்கள் அரிதின் முயன்று தொகுத்த இந்நூல், ஆராய்ச்சி வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படத்தக்கதாகும்.

ஐயங்காரவர்கள் தொகுத்த பாடல்களின் தொகை 3,500க்கு மேற்பட்டவையென்றும், அவற்றுள் இந்நூலிலுள்ள 2,214 செய்யுள்கள் போக, எஞ்சியுள்ளவற்றை '**இன்பவியல், ஒழிபியல்**' என்னும் இரு பகுதிகள் அடங்கியதாக வகைப்படுத்தி அமைத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். அந்நூலும் வெளி வரின் பெரிதும் பயன் விளைக்கும்.

என் நண்பர் அறிஞர் சீனி. **வேங்கடசாமியாரவர்கள்** '**மறைந்து போன தமிழ் நூல்கள்**' என்னும் பெயரால் 1959ஆம் ஆண்டு, சனவரித் திங்களில் ஒரு நூலை வெளியிட்டுள்ளார். அந்நூல், யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, தொல்காப்பியம் உள்ளிட்ட பல நூல்களின் உரைகளில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ள நூல்களில் இங்கொன்றும் அங்கொன்றுமாக உள்ள பாட்டுகளையும் சூத்திரங்களையும் அவ்வந் நூற்பெயர்த் தலைப்பின்கீழ்த் தொகுத்து அமைத்துக் காட்டியிருக்கின்றார். ஒரே செய்யுள் அல்லது ஒரே சூத்திரம் பல நூல் உரைகளில் மேற்கோளாக அமைந்

திருப்பது, அவற்றை ஒன்ரேடொன்று ஒப்புநோக்கி ஆராய்ந்து செவ்விய பாடங்களைத் தெரிந்துகொள் வதற்கு வசதியளிப்பதாயும், பின் வெளி வரும் அவ் வந்நூற்பதிப்புகளைச் செப்பமுறப் பதிப்பித்தற்கு வழி வகுப்பதாயும் அமைந்துள்ளது; பண்டை நூல் உரைகளைப் பதிப்பிப்பவர்க்கு உண்மைப் பாடங் களைத் தேர்ந்தறியவும் எவ்வெம்மேற்கோள் எவ்வெந் நூலைச் சார்ந்தது என ஆகரம் சுட்டவும் பெரிதும் பயன்படும்.

இந்நூலில் இலக்கண நூல்கள், இலக்கிய நூல் களுள் அகப்பொருள் இலக்கியங்கள், புறப்பொருள் இலக்கியங்கள், ஏனைய நூல்கள், இசைத்தமிழ் நூல்கள், நாடகத் தமிழ் நூல்கள், சிதைவுண்ட தமிழ் நூல்கள் என்னும் தலைப்புகளின்கீழ் நூல்களை வகைப்படுத்தி, நூல்களைப் பற்றிய விளக்கக் குறிப்பு களையும், அவ்வந்நூல்களில் இறவாது எஞ்சியுள்ள சிற்சில சூத்திரங்களையும் செய்யுள்களையும் புலப் படுத்தியுள்ளார் தொகுப்பாசிரியர்.

**மறைந்த இலக்கண நூல்கள் :**

மறைந்த இலக்கண நூல்களை யாப்பியல், அணி யியல், பாட்டியல், சொல்லியல் எனப் பாகுபடுத்திக் கொள்ளலாம்.

**யாப்பியல் :**

'**அவிநயம்**' என்னும் நூலிலிருந்து பல சூத்திரங் கள் யாப்பருங்கல விருத்தி முதலிய உரைகளில் மேற்

கோளாக எடுத்தாளப்பட்டுள்ளன. இஃது அவிநயனு ரால் இயற்றப்பட்ட நூல்.

**'அவிநயப் புறனடை'** என்னும் நூல், யாப்பருங் கலத்துக்கு யாப்பருங்கலக் காரிகை அங்கமாய் அமைந்தது போல, அவிநயத்துக்கு அங்கமாய் அமைந்தது. இது நக்கீரனுரால் இயற்றப்பட்ட நாற் பது வெண்பாக்களையுடையதாகையால், 'நக்கீரர் அடி நூல்' எனவும் 'நக்கீரர் நாலடி நாற்பது' என வும் உரையாசிரியர்களால் வழங்கப்பட்டுள்ளது.

**'காக்கை பாடினியம்'** என்பது, காக்கை பாடினி யார் என்னும் நல்லியற்புலமை மெல்லியலாரால் இயற்றப்பட்ட சூத்திரங்களாலானது.

**'சிறுகாக்கை பாடினியம்'** என்பது, சிறு காக்கை பாடினியார் என்னும் செந்தமிழ்ச் செல்வியாரால் இயற்றப்பட்ட இனிய நூற்பாக்களை உடையது.

புலமைச் செல்வியராகிய இவ்விருவர் பெய ரொப்புமையை நோக்குங்கால் இருவரும் உடன் பிறந்த தமக்கையும் தங்கையுமாயிருக்கலாமெனக் கருதுகின்றேன்.

**'கையனுர் யாப்பியல்'** என்பது, கையனுர் என்னும் யாப்பறி புலவரால் இயற்றப்பட்டதென்பதை அதன் பெயரே புலப்படுத்தும்.

*" ஆய்தந் தானே குறியதன் கீழ்த்தாய்*
*வலியதன் மேல்வந் தியலும் என்ப."*

என்னும் எடுத்துக்காட்டைக்கொண்டு இந்நூலும் நூற்பாவால் அமைந்தது என்பதையறியலாம். 'இந்

நூல் சில இடங்களில் அடைமொழியின்றி 'யாப்பியல்' எனவும் குறிக்கப்பட்டுள்ளது.

'சங்க யாப்பு' என்பதும் நூற்பாவால் இயன்றதே. இந்நூலின் ஆசிரியர் 'சங்கயாப்புடையார்' எனவே எங்கும் வழங்கப்பட்டிருப்பதால், இவரது இயற்பெயர் மறைந்தமை வெளிப்படை.

*" அரைநொடி அளவின அறுமூ வுடம்பே.*
*" அரைநொடி என்ப தியாதெனை மொழியின்*
*நொடிதரக் கூடிய இருவிரல் இயைபே."*

என்பன இவர் இயற்றிய நூற்பாக்களுள் இரண்டு.

'செய்யுளியல்' என்பது, ஆக்கியவர் பெயரும் மறைந்த நூல். இந்நூலாசிரியர் செய்யுளியலுடையார் எனவே சுட்டப்படுகிருர்.

'நத்தத்தம்' என்பது, நத்தத்தர் என்பவரால் இயற்றப்பட்டது. இவ்வாசிரியர் பெயர் 'நற்றத்தனுர்' எனவும் சில பதிப்புகளில் காணப்படுகிறது.

'பரிமாணம்' என்னும் யாப்பு, பரிமாணனுர் என்னும் புலவர் இயற்றியது; நூற்பாவால் அமைந்தது.

*' செப்ப லோசையிற் சீர்தளை சிதையாது*
*மெய்ப்படக் கிளந்த வெண்பா விரிப்பின்,*
*குறள்நேர் நெடிலென மூன்ருய், அவற்றின்*
*இறுதி யடியே முச்சீர்த் தாகி,*
*அதனீற் றசைச்சீர் எய்தி, அடிவகை*
*ஓரிரண்டு முதலா முறைசிறந் தீரா று*
*ஏறும் என்ப இயல்புணர்ந் தோரே.'*

என்பது பரிமாணனுர் இயற்றிய நூற்பா. இதனுல் ப∴ருெடை வெண்பா 'நெடில் வெண்பா' எனவும்

வழங்கப்பட்டமையும், அதன் பேரெல்லை பன்னிரண் டடியாம் என்பதும் அறியலாம்.

'**பல்காயம்**' என்பது, பல்காயனுர் என்னும் புலவர் இயற்றிய யாப்பு நூல்.

*" வஞ்சி விரவல் ஆசிரியம் உரித்தே;*
*வெண்பா விரவினும் கடிவரை யின்றே."*

என்பது பல்காயச் சூத்திரம். இஃது ஆசிரியப்பாவில் வஞ்சியடியும் வெண்பாவடியும் கலந்து வரினும் நீக்கப்பட மாட்டா என்பதை உணர்த்துகின்றது. 'பல்காயம்' என்பது '**பல்காப்பியம்**' எனவும், 'பல்காயனுர்' என்பது 'பல்காப்பியனுர்' எனவும் சில பதிப்புகளில் பிழைபடப் பதிக்கப்பட்டமை ஆராய்ச்சியாளரை மருட்சிக்குட்படுத்தியிருப்பதை அறியலாம். 'பல்காப்பியம்' என்னும் தலைப்பின்கீழ் மறைந்த நூல்களின் தொகுப்பாசிரியர், 'பல்காப்பியச் சூத்திரங்களுள் ஒன்றேனும் கிடைக்கவில்லை,' என்றெழுதிய குறிப்பு இதனைப் புலப்படுத்தும். பாட மாறுபாட்டால் விளையும் இன்னலை இது விளக்குகின்றது.

பல்காயனுர், '**பல்காயப் புறனடை**' என்னும் நூலொன்றையும் பல்காயத்திற்கு அங்கமாக இயற்றினுர் என்பது தெரிகின்றது. இஃது யாப்பருங்கல ஆசிரியராகிய அமிதசாகரனுரே, அந்நூலுக்கு அங்கமாக யாப்பருங்கலக் காரிகையும் இயற்றியது போல்வது.

'பல்காயனுர்' என்பதே பல்காயத்தின் ஆசிரியர் பெயர் என்பதற்குப் பின் காணும் வெண்பாச் சான்று பகர்கிறது :

*'தொல்காப் பியப்புலவர் தோன்ற விரித்துரைத்தார்;*
*பல்காய ஞர்பகுத்துப் பன்னிஞர்;—நல்யாப்புக்*
*கற்ருர் மதிக்கும் கலைக்காக்கை பாடினியார்*
*சொற்ருர்தம் நூலுள் தொகுத்து.'*

இது தக்க சான்று என்பதைப் 'பல்காப்பியர் பகுத்துப் பன்னிஞர்' என்று பாடியிருந்தாலும் வெண்பாவின் இலக்கணம் சிதையாமையால் இச்செய்யுளை இயற்றிய ஆசிரியருக்கு அது கருத்தன்று என்பதும் அறியலாம். இச்செய்யுள் யாப்பருங்கல விருத்தி முதற்சூத்திர உரையில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது.

**'பனம்பாரம்'** என்பது, பனம்பாரஞரால் இயற்றப்பட்ட யாப்பு நூல். பவணந்தி முனிவர், நன்னூலில் 'தோன்ரு தோற்றி' எனத் தொடங்கும் சூத்திரத்தையும் 'மன்னுடை மன்றத்து' எனத் தொடங்கும் சூத்திரத்தையும், 'முன்ஞேர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும் பொன்னேபோற் போற்றுவம்' என்னும் தொல்லாசிரியர் நல்லாணைக்கிணங்கச் சிறப்புப்பாயிரத்தில் எடுத்தமைத்துக்கொண்டார். **மயிலை நாதர்** என்னும் நன்னூலுக்கு முதல் உரையாசிரியர், அச்சூத்திரங்களைப் பனம்பாரஞர் சூத்திரங்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். **பனம்பாரஞர்,** தொல்காப்பியத்திற்குப் பாயிரம் வழங்கிய பெரியார் என்பதை அனைவரும் அறிவர்.

**'பெரிய பம்மம்'** என்பது, மற்ருெரு யாப்பிலக்கணம். இந்நூலாசிரியரின் பெயர் மறைந்துவிட்டது. இவர் இயற்றிய சூத்திரங்களுள் ஒன்று யாப்

பருங்கல விருத்தியில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது:

*‘உயிர்உறுப்பு உயிர்மெய் தனிநிலை எனுஅ,*
*குறில்நெடில் அளபெடை மூவினம் எனுஅ,*
*அஃகிய நாலுயிர் மக்கான் குறுக்கமொடு*
*ஐந்துதலை யிட்ட ஐயீ ரெழுத்தும்*
*அசைதொடை நேரசை ஆகும் உறுப்பென*
*வசையறு புலவர் வகுத்துரைத் தனரே.’*

‘இது பெரிய பம்மம்,’ என்பது உரையாசிரியர் குறிப்பு.

‘மயேச்சுரர் யாப்பு’ என்பது, யாப்பருங்கல விருத்தியில் பற்பல இடங்களில் பன்முறை மேற்கோளாக எடுத்தாளப்பட்டுள்ளது. இவ்வாசிரியரைப் ‘பேராசிரியர்’ என்றும் ‘திரிபுரமெரித்தவர் பெயர் மகிழ்ந்த பேராசிரியர்’ என்றும், பிறவாறும் விருத்தியுரையாசிரியர் சுட்டிப் பாராட்டியிருப்பதால், இவரை அவர் பெரிதும் மதித்தவர் என்பது புலனாகும். இந்நூலிலிருந்து ஐம்பத்து மூன்று சூத்திரங்கள் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன.

‘மாபுராணம்’ என்பது, மற்றொரு யாப்பு நூல். இஃது இடைச்சங்கத்து நூல்களுள் ஒன்றாகக் குறிக்கப்பட்ட ‘மாபுராணமே’ எனக் கருத இடமுண்டு. இது வெண்பாவினாலும் நூற்பாவினாலும் இயற்றப்பட்ட விரிவான இலக்கணமென்பதை, எடுத்துக்காட்டாகக் காட்டப்பட்டவற்றைக்கொண்டு அறியலாம். இந்நூலாசிரியர் ‘மாபுராணமுடையார்’ என்றே குறிக்கப்படுவதால், இவரது இயற்பெயர் தெரியவில்லை.

'மகரக் குறுக்கத்துக்குப் பயன், மகரப் பிரகரணத்துட்கண்டுகொள்க. ஈண்டுரைப்பிற்பெருகும்,' என்னுங்குறிப்பால், 'மகரப் பிரகரணம்' என்பது மாபுராணத்து இயல்களுள் ஒன்று என்பதை அறியலாம். ஏட்டிலுள்ள இப்பாடம் 'மாபுராணம்' எனவே ஒலி ஒப்புமையால் பிறழக் கருதிப் படி செய்யப்பட்டு அச்சேறியுள்ளது. பிரகரணம்—அத்தியாயம்.

'**வாய்ப்பியம்**' என்பது, வாய்ப்பியனுர் இயற்றிய யாப்பியல். இந்நூலிலிருந்தும் யாப்பருங்கல விருத்தியில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளதைக் காணலாம்.

இலக்கண நூற்பட்டியலில் மறைந்துபோன தமிழ் நூல்களின் தொகுப்பாசிரியர் 'நக்கீரர் நாலடி நானூறு' என்னும் நூற்பெயரையும் சேர்த்துள்ளார். அந்நூலே இன்று வழங்கும் **நாலடியார்** என்னும் இலக்கியம் எனத் துணியலாம். செப்பலோசையை விளக்கும்போது யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் பல வெண்பா இலக்கியங்களை மேற்கோள் காட்டி, 'இன்னவை பிறவும், **நக்கீரர் நாலடி நானூற்று** வண்ணத்தால் வருவனவும் எல்லாம் தூங்கிசைச் செப்பலோசை,'* என விளக்கம் தந்துள்ளார். 'நாலடி நானூறு' என்பது, நாலடியாரைக் குறித்தே பண்டு தொட்டு வழங்கி வரும் வழக்கு. நன்னூல் உரையாசிரியராகிய மயிலைநாதர், நன்னூல்48ஆம் நூற்பா உரையில் 'அளவினுற்பெயர் பெற்றன **நாலடி நானூறு** முதலாயின,' எனக் குறிப்பிடுவது இங்குக் கருதத்

* *யாப்பருங்கல விருத்தி, செய்யுளியல், 4 உரை (பவானந்தம் பிள்ளையவர்கள் பதிப்பு. 1916, ப. 217)*

தக்கது. 'திருவள்ளுவப் பயன் நாலடி நானூறு முதலாகிய கீழ்க்கணக்குள்ளும்' என்பது, யாப்பருங்கலக் காரிகையின் உரையாசிரியராகிய குணசாகரர் 38ஆம் காரிகை உரையிற்காட்டும் குறிப்பு.

பாட்டியல்: அகத்தியர் பாட்டியல், கவி மயக்கறை (சித்திர கவிகளின் இலக்கணம்), செய்யுள் வகைமை, தத்தாத்திரேயர் பாட்டியல், பாட்டியல் மரபு, பெரிய முப்பழம், முள்ளியார் கவித்தொகை, வாருணப்பாட்டியல் என்பன மறைந்த பாட்டியல் நூல்களாம்.

அகப்பொருள்: 'கடிய நன்னியார் கைக்கிளைச் சூத்திரம்' என்பது, மறைந்த அகப்பொருள் இலக்கணம்,

'அணியியல்' என்பது, மறைந்த அணியிலக்கணம்.

சொல்லியல்: 'தக்காணியம், நல்லாறன் மொழி வரி' என்பன மறைந்த சொல்லதிகாரங்கள்.

உரைநடை உருப்பெறுவதற்கு முன் பல துறை நூல்களும் செய்யுளால் யாக்கப்பட்டமை காரணமாக, முன்னுளில் யாப்புப் பயிற்சியே மிக்கிருந்ததால் யாப்பிலக்கணங்களே மிகுதியாக இயற்றப்பட்டன என்பதை உணரலாம்.

மறைந்த செய்யுள் இலக்கியங்கள் மிகப்பல வாதலின், அவற்றைப்பற்றிய செய்திகளை அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமியாரவர்கள் தொகுத்த 'மறைந்து போன தமிழ் நூல்கள்' என்னும் நூலிற்

கண்டு அறியலாம். விரிவஞ்சி அவற்றை இங்குக் குறியாது விடுகின்றேன்.

## உரை நடை இலக்கியம்

பண்டைச் செய்யுள் நூல்களை உரையின்றிப் பயில்வது கடினமாதலால், பெரும்புலமை வாய்ந்த உரையாசிரியர் பலர் அவற்றுக்கு உரையியற்றியுள்ளனர். அவர்கள் அருளுடைமை பெரிதும் பாராட்டத் தக்கது. செய்யுள் நூல்களுக்கெழுந்த பழைய உரையிலும் செய்யுள் நடை நிழலாடுவதைக் காண்கிறோம். எனவே, உரைகளை நன்கு விளங்கிக்கொள்ளவும் தக்கார் உதவி வேண்டப்படுகிறது.

அயல் நாட்டு அறிஞர்கள் தமிழ் நாட்டுக்கு வந்த பின் தங்கள் மதத்தைப் பரப்பக் கருதித் தமிழ் பயின்றார்கள்; உரை நடை நூல்களே அச்செயலுக்கு ஆக்கந்தருவன என்பதை உணர்ந்து, உரை நடை நூல்களை எழுதத் தொடங்கினார்கள். அச்சுப் பொறியும் அவர்களோடு தமிழ் நாட்டிற்குடியேறியது. அதனால் விளைந்த நன்மைகள் அளவிறந்தன.

உரை நடை வளர்ச்சியைப் பற்றி அறிஞர் சிலர் ஆராய்ச்சி செய்து சிறந்த நூல்களை வெளியிட்டிருக்கின்றனர்; இம்மேடையிலும்,* ஆராய்ச்சியுரை நிகழ்த்தியுள்ளனர். ஆகலின், அதைப் பற்றி விரிவாகப் பேசுவது இன்றியமையாததன்று.

* சென்னைப் பல்கலைக் கழகச் சொற்பொழிவு மண்டப மேடை.

உரை நடையை வளர்த்த பெரியார்களுள் மாயூரம் வேதநாயகம் பிள்ளை, யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், இராசம் ஐயர், மறைமலையடிகளார், திரு. வி. கலியாணசுந்தரனர், பெரும்பேராசிரியர் சாமிநாத ஐயர் உள்ளிட்டார் பலராவர். ஆறுமுக நாவலர் உரை நடை இலக்கியத்திற்கு ஆற்றிய தொண்டு மறக்கற்பாலதன்று.

மேடைப்பேச்சிலும் நூலிலும் மோனைத் தமிழை நடையாடச் செய்து பல்லாயிரக்கணக்கானவர்களைச் சொல்லின்பந்திளைக்கச் செய்த பேராசிரியர் **ரா. பி. சேதுப்பிள்ளையவர்**களின் தமிழ்த்தொண்டும் பல்லாண்டு வரை தமிழ் நாட்டில் பசுமையுற்றுத் திகழும் என்பதில் ஐயமில்லை.

இன்று நம்மிடையே வாழும் நல்லறிஞர் பலர் பிழையற்ற செந்தமிழில்—பலரும் படித்தறியத் தக்க எளிய நடையில்—பண்டைப் பெருநூல்களை விளக்கி, அழகிய கட்டுரைகளும் நூல்களும் இயற்றி வெளியிட்டு வருகின்றனர். பல துறை அறிவியற்கலைகளும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடும் முயற்சியில் அரசியலாரும் கருத்தைச் செலுத்தி வருகின்றனர். இளைஞர்களும் நல்ல தமிழ் பேசவும் எழுதவும் முயன்று வருகின்றார்கள். எதிர்காலம் தமிழ் மொழி எங்கும் பரவ வழி வகுக்கும் என்று எண்ணுகின்றது என் உள்ளம். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் தனது தனிச்சிறப்பை இழந்து சோர்வுற்றிருந்த தமிழன்னை, இனித் தழைத்தோங்கி, எல்லாத் துறைகளிலும் ஏற்றமுற்று விளங்குவள் என்பதில் ஐயம் இல்லை.

## மொழி மரபுகளுட்சில

யான் கண்ட மொழி மரபுகளுட்சிலவற்றை உங்கள் ஆய்வுக்கு உரியனவாக்க விழைகின்றேன்.

*'எப்பொருள் எச்சொலின் எவ்வா றுயர்ந்தோர்*
*செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே.'*

என்னும் பவணந்தி முனிவர் கருத்தின்படி சான்றோர் வழங்கிய வழக்கை அறிந்து அவ்வழக்கிற்கு இயையச் சொற்களை வழங்குதல் பொருள் சிதையாதிருத்தற்கு வழியென்பதை அறிகிறோம். இம்முறை தவறுதல் மரபு வழுவெனக் கருதப்படும். இது சொல் வழக்காற்றிற்கும் ஒக்கும். 'எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்,' என்பது பழமொழி. இப்பழமொழிக்கு இயையச் சில ஏடுகளில் எழுத்து மாறுபாடுகளும் புகுத்தப்பட்டதால், அவை பின்னர்ப் படி செய்தவர்களிழைத்த பிழையால் வழி வழி வழங்கும் பொய் வழக்குகளாய்விட்டன. அவற்றை ஆய்ந்து உண்மை கண்ட பின் ஏற்றுக்கொள்வது தொல்லாசிரியர் நல்லாணை வழி நிற்கும் கற்றோர் கடமை எனக் கருதுகிறேன்.

**வன்றொடர்க்குற்றுகரத்தின் பின் வலி மிகல் :**

*'வன்றொடர் அல்லன முன்மிகா அல்வழி'*

என்னும் விதியால் வன்றொடர்க் குற்றுகரத்தின் பின் வருமொழி முதலில் வரும் வல்லினம் அல்வழி வேற்றுமை என்னும் ஈரிடத்தும் மிகும் என்பது பெறப்பட்டது. "சுக்குக் கடிது, பதக்குப்பெரிது என வன்றொடரின் மிக்கவாறு காண்க," என்றார் மயிலைநாதர். 'சுக்குக் கடிது, பதக்குப் பெரிது' என்பன எழுவாய்த் தொடர்கள் என்பதை நாம் அறிவோம்.

'கொக்குப் பறக்கும்; புறாப்பறக்கும்;
குருவி பறக்கும்! குயில் பறக்கும்;
நக்குப் பொறுக்கி களும்பறப்பர்;
நானேன் பறப்பன் நராதிபனே !'

என்னும் இராமகவிராயர் பாட்டிலும் 'கொக்குப் பறக்கும்' என அல்வழியிலும், 'நக்குப் பொறுக்கிகள்' என வேற்றுமையிலும் வலிமிக்கதைக் காண்கிறோம். இவ்விதி பொருட்புணர்ச்சிக்குக் கூறியது. இதையே விகுதிப்புணர்ச்சிக்கும் விதியெனக் கருதி, பலர், 'எழுத்துக்கள், கருத்துக்கள், பதிப்புக்கள்' என எழுதலாயினர். இது பொருந்துமாறில்லை. 'வாழ்த்துதல், கூப்புக' என்னும் சொற்களில் விகுதியிலுள்ள தகர பகர மெய்கள் மிகாமைக்குக் காரணமென்ன ? விகுதிகள் இடைச்சொல்லாதலே காரணம் எனக் கொள்ளலாம். 'வாழ்த்துகின்றோம், கூப்புகின்றோம்' என்னும் சொற்களைப் பகுதி விகுதி இடைநிலையாகப் பிரிக்குங்கால், 'வாழ்த்து + கின்று + ஓம்' எனவும், 'கூப்பு+கிறு+ஓம்' எனவும் பிரிக்கிறோம். இவற்றில் 'வாழ்த்து, கூப்பு' என்னும் பகுதிகள் வன்றொடர்க்குற்றுகர மொழிகளே. பொருட்புணர்ச்சி விதியின்படி இவற்றை யாரும் 'வாழ்த்துக்கின்றோம், கூப்புக்கிறோம்' என எழுதுவதுமில்லை; உச்சரிப்பதுமில்லை. காரணம் யாது ? 'கின்று, கிறு' என்பனவும் இடைச்சொற்களாயிருப்பதே அன்றோ? எனவே, இடைச்சொற்புணர்ச்சியாகிய இடை நிலை, விகுதிப் புணர்ச்சிகளில் வலி மிகாது என்பது பெறப்பட்டது.

'இடையுரி வடசொலின் இயம்பிய கொளாதவும்
போலியும் மரூஉவும் பொருந்திய ஆற்றிற்கு
இயையப் புணர்த்தல் யாவர்க்கும் நெறியே.'

என்னும் நன்னூற்சூத்திரத்தால் (239) இவ்விகுதிப் புணர்ச்சிக்கு அமைதி காண்பதே பொருத்தமாம். இங்ஙனம் கொண்டாரும் உளர் என்பது அறியத் தக்கது.

பழைய ஏட்டுச்சுவடிகள் சிலவற்றில் விகுதிப் புணர்ச்சியில் வன்றொடர்க் குற்றுகரத்தின் பின் வலி மிகாதிருப்பதைக் காணலாம். இலக்கணப் பெரும்புலமை பெற்றவராகிய யாப்பருங்கலக்காரிகை உரையாசிரியராகிய **குணசாகரரும்**, நன்னூல் உரையாசிரியர்களாகிய **இராமானுச கவிராயரும், திருத்தணிகை விசாகப்பெருமாள் ஐயரும்**, பின்னூலாசிரியராகிய **மறைமலையடிகளாரும்** இக்கருத்தையே மேற்கொண்டவர்கள் என்பதை முன்னவர் மூவரின் பழைய பதிப்புகளையும், பின்னவர் 1925ஆம் ஆண்டு, சூலைத்திங்களில் பதிப்பித்த '**சிந்தனைக் கட்டுரைகள்**' என்னும் நூலையும் கண்டு தெளியலாம்.

தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர் இயற்றிய கலைசைச் சிலேடை வெண்பாவில்,

' *மாதரம்பொற்* கொப்புகளும் *மன்னீர் மதகுகளும்*
*காதலையப் போடும் கலைசையே*'

என, '**கொப்புகள்**' என்னும் சொல்லை ஆண்டிருப்பதைக் காணலாம்.

"*மாதரம்பொற்* கொப்புடனே *மன்னீர் மதகுகளும்*
*காதலையப் போடும் கலைசையே.*"

என அமைப்பினும் வெண்பாக் கெடாதன்றோ ?

கவிஞர் தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் பாடிய 'குழந்தைச் செல்வம்' என்னும் நூலின் 51ஆம்

பாடலில் 'நாடியே வட்டுகள் ஆடிடுவோம்' என்னும் அடியில் 'வட்டுகள்' என்னும் சொல்லைக் காணலாம். 'நாடியே வட்டுக்கள் ஆடிடுவோம்' என்றாலும் பாட்டுக் கெடாதன்றோ ?

உமறுப்புலவர், தம் சீறாப்புராணம், தலைமுறைப் படலம், 15ஆம் செய்யுளில் 'மலக்குகள் வணக்கம் செய்தார்' எனப் பாடியிருக்கிறார்.

விசாகப்பெருமாளையர் அவர்கள் தாமியற்றிய பாலபோதவிலக்கணம், 1870ஆம் ஆண்டு பதிப்பில் 'உயிரெழுத்துகள், குற்றெழுத்துகள், நெட்டெழுத்துகள், மெய்யெழுத்துகள், இனவெழுத்துகள், போலியெழுத்துகள், உறுப்புகள், வினைமுற்றுகள், வடவெழுத்துகள், முதலெழுத்துகள், முடிப்புகள். தொகுப்புகள் என விகுதிப்புணர்ச்சியில் வலி மிகாமலே பதிப்பித்திருக்கிறார்கள்.

இராமானுச கவிராயர் 1848ஆம் ஆண்டு வெளியிட்ட இலக்கணச் சுருக்கத்திலும், நன்னூல் உரையிலும் இம்முறையையே மேற்கொண்டுள்ளார். இவை நிற்க.

தனி நெட்டெழுத்தைச் சார்ந்து நிற்கும் மெய், விகுதிப் புணர்ச்சியில் வலி வருங்கால் திரியாமையும் பொருட்புணர்ச்சியில் திரிதலும் கருதத்தக்கன.

**நாட்கள்—நாள்கள்:** நாட்கள் என்பது சொற்றொடர் என்பதையும், நாள்கள் என்பது பகுபதம் என்பதையும் அறிகிறோம். புறநானூற்று 123ஆம் செய்யுள் 'நாட்கள் உண்டு' எனத் தொடங்குகிறது.

'நாட்காலையே மதுவையுண்டு' என உரை எழுதப் பட்டுள்ளதையும் காணலாம். 'நாள்கள்' என்பது, நாளின் பன்மையை உணர்த்துவது.

"நடத்தலரி தாகுநெறி; நாள்கள்சில தாயர்க்
கடுத்தபணி செய்திவண் இருத்தி,'என அச்சொற்
குடுத்ததுகி லோடும்உயிர் உக்கவுட லோடும்
எடுத்தமுனி வோடும்அயல் நின்றதும் இசைப்பாய்"

என்பது, கம்பராமாயணம், சுந்தர காண்டம், உருக் காட்டுப் படலம், 60ஆம் செய்யுள். இது சீதை அனுமனுக்குக் கூறிய கூற்று.

"நாள்களோர் நாலைந்து திங்கள் அளவிலே
தாளை நிமர்த்துச் சகடத்தைச் சாடிப்போய்
வாள்கொள் வளையெயிற் றாருயிர் வவ்வினான்
தோள்கள் இருந்தவா காணீரே
சுரிகுழ லீர்வந்து காணீரே."

என்பது, திவ்வியப்பிரபந்தம், பெரியாழ்வார் திருமொழி, 1:2:11.

"கைதொழும் நாள்களும் ஆகுங் கொல்லோ?"

என்பது திருவாய்மொழி, 7:10:1.

"நாளைப்போ வேனென்று
நாள்கள்செலத் தரியாது"

என்பது, பெரியபுராணம், திருநாளைப் போவார் நாயனார் புராணம், 21.

"மண்ணாள் வேந்தே நின்வாழ் நாள்கள்"

என்பது, சிலப்பதிகாரம், 28:126.

இங்ஙனம் முன்னோர் பலரும் 'நாள்கள்' எனவே ஆண்டிருப்பினும், இந்நாளில் பலர் 'நாட்கள்' எனவே நாளின் பன்மையைப் பேச்சிலும் எழுத்திலும் வழங்குவதைக் காண்கிறோம்.

தூண்கள், கால்கள், நூல்கள், வால்கள், வாள்கள், செதில்கள், பொருள்கள், விரல்கள் என்னும் சொல்லாட்சிகளும் இங்குக் கருதத் தக்கன.

**தனித்தனி :** 'தனித்தனி' என்னும் அடுக்குத் தொடருக்குப்பின் வலி இயல்பாதல் மரபு என்பதை,

"*தங்களில் தனித்தனி தளர்ந்தார்*"

என வில்லி பாரதம், இராசசூயச் சுருக்கம், 24ஆம் செய்யுளும்,

"தனித்தனி *புலம்ப லுற்றார்*"

எனச் சூதுபோர்ச்சருக்கம், 283ஆம் செய்யுளும்,

"*வேலை* தனித்தனி *கடக்கும் தாள*"

எனக் கம்பராமாயணம், சுந்தர காண்டம், உருக் காட்டுப் படலம், 32ஆம் செய்யுளும் குறிப்பதைக் காண்கிறோம். இப்பொழுது பலர் இத்தொடர்க்குப் பின் வலி மிகுத்தே எழுதுகின்றனர்.

**ரகர றகரங்கள் மாறாட்டம் :**

இடையின ரகரமும் வல்லின றகரமும் சொற் பொருள் விளக்கத்திற்கு இன்றியமையாதவை. இவை ஒன்றுக்குரிய இடத்தை மற்றொன்று அடைவதால் பொருளில் ஏற்படும் மாறுபாடுகள் பல. அவற்றுட் சிலவற்றைக் காண்போம் :

**முரிதலும் முறிதலும் :**

'முரிதல்' என்னும் இடையின ரகர இகரம் அமையும் சொல் 'ஒடிதல்' என்னும் பொருளதா தலைச் சூடாமணி நிகண்டு குறிக்கிறது. 'இடைக்கண் **முரிந்தார்** பலர்' என்னும் (குறள், 473) சொற்றொடரில் 'முரிந்தார்' என்பது 'கெட்டார்' என்னும் பொருளது.

'பஞ்சினம் புகைமுரிந் தெழுந்தென விண்ணகத் தலமர' என்னும் கல்லாடம் 7ஆம் செய்யுளிற் காணும் 'முரிந்து' என்னும் சொல் 'சிதறி' என்னும் பொருளது. 'முரியுங்காலைத்தெரிய மற்றதிற் றட்டினன் எழுப்பி' என்னும் பெருங்கதைச் சொற்றொடரில் 'முரியும்' என்பது 'தவறும்' என்னும் பொருளது. 'முரிந்து கடை நெரிய வரிந்தசிலைப் புருவம்' என்னும் மணிமேகலைச் சொற்றொடரில் 'முரிந்து' என்னும் சொல், 'வளைந்து' என்னும் பொருளது. 'முரிதிரை' என்பது திவ்வியப் பிரபந்தம், 1118; அறநெறிச்சாரம், 105; 'முரிந்தசிலை' என்பது திவ்வியப் பிரபந்தம் 2483; 'விளக்கு முரிந்தது' என்பது, நன். மயிலை. சூ. 28 உரை எடுத்துக்காட்டு.

'முறிதல்' என்னும் வல்லின றகர இகரம் பெற்ற சொல், 'தளிர்த்தல்' அல்லது 'கொழுந்துவிடல்' என்னும் பொருளது. 'முறிந்த கோல மூகிழ்முலையார்' என்பது, சிந்தாமணி, 2358ஆம் பாடலின் தொடர். 'முறி' என்னும் சொல் 'தளிர்' எனப் பொருள் படுதலை,

'முறிமேனி; முத்தம் முறுவல்; வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு' (குறள், 1113)
'இலையே முறியே தளிரே தோடே' (தொ.பொ.642)

என்னும் சான்றோர் சொல்லாட்சியால் அறியலாம். ஓலையாவணம் 'முறிச்சீட்டு' என வழங்கப்படுவதும் அறியத் தக்கது. ஏடெழுதுவதில் எழுதுபவர் செய்த பிழைகளால் பல்கலைக் கழகச் சொல்லகராதி எழுத்து மாறுபடிய இருவகைச் சொற்களுக்கும் ஒத்த பொருள் தந்துள்ளமை ஓதுவார்க்கு ஐயம் விளையக் காரண

மாயிற்று. கற்றுரையும் கலக்கமுறச் செய்யும் செய லன்றே இது! பல்கலைக் கழகச் சொல்லகராதி அளப் பரும்பயன் விளைப்பதாயினும், பல சொற்களைக் கரந்துறை வாழ்க்கையினை மேற்கொள்ளச் செய் துள்ளது. அதிலுள்ள வழுக்களைத் தக்காரைக் கொண்டு அகற்றி, வழுவற்ற பதிப்பைத் தமிழ் நாட் டுக்களிப்பது தமிழ்க்குச் செய்யும் தனிப்பெருந் தொண்டாகும் என்பதைப் பல்கலைக் கழகத்திற்குப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பொருள் மயக்கச் சொல்லாட்சி :**

இக்கால இலக்கண நூலொன்றில் 'அகரம் முதல் ஔகாரம் வரையில் உள்ள பன்னிரண்டெழுத்தும் உயிரெழுத்தென்று அழைக்கப்படும்,' என்றிருந்ததைக் கண்டு திடுக்கிட்டேன்! விளித்தலே அழைத்தல் என்பதே தமிழ் மரபென்பதை, எட்டாம் வேற்றுமை யின் பொருள்

*'படர்க்கை யோரைத்*
*தன்முக மாகத் தானழைப் பதுவே'*

என்னும் நன்னூல் நூற்பாவால் அறியலாம். ஆங்கி லத்தில் எண்ணித் தமிழில் மொழி பெயர்த்தெழுதும் பழக்கமே இதற்குக் காரணமாகும். 'வழங்கப்படும்' என்பதே தமிழ் மரபு. வழங்குதல், சொல்லுதல். 'யானே தேறேன் அவர் பொய்வழங் கலரே,' என்பது குறுந்தொகைச் செய்யுள்(21).

## மொழித்திறம் பேணல்

உலகில் வாழும் மன்பதைகளும் அவை வாழும் நாடுகளும் மொழியைக்கொண்டே வழங்கப்படுதல்

கவனித்தற்குரியது. தமிழ் மொழி பேசுவார், எம்மதத்தினராயினும், தமிழரேயாவர். தமிழ் வழங்கும் நாடு, 'தமிழகம், தமிழ் நாடு' என்றே வழங்கப்படும்.

'வடவேங்கிடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறும் நல்லுலகம்'

என்பது, தொல்காப்பியத்திற்குப் பாயிரம் வழங்கிய பனம்பாரனார் கூற்று. ஆந்திர மொழியை வழங்குவோர் ஆந்திரர்; அவர் வாழும் நாடு ஆந்திர நாடு. வங்கமொழி பேசுவோர் வங்காளியர்; அவர்கள் வாழும் நாடு வங்காளம். ஏனையரும் அனையர்; ஏனைய நாடுகளும் அன்ன.

எனவே, மக்களுக்குப் பெற்ற பேறுகளுள் பெரும் பேறு மொழியே என்பது வெளிப்படை. ஒரு மொழியின் இலக்கிய இலக்கணங்களே அந்தமொழியினுக்குரியாரின் நாகரிகப் பண்பாட்டை நன்கு விளக்கும். அவையே அவர்கள் வாழ்க்கைக் கண்ணாடி. அயல் மொழியாகிய ஆங்கிலம் செலுத்திய ஆதிக்கத்தால் தமிழ் மொழி தனது சிறப்பிழந்து நின்றதை அறியாதார் யார்? பட்டி தொட்டிகளிலெல்லாம் பயில்மொழியொழிந்து அயல் மொழி ஆதிக்கம் பெற்றதை அறிவோம். அயல் மொழி பயின்ற அறிஞர் பலர் தமிழிற் பேசுவதும் தாழ்வென்று கருதிய காலம் கழிந்து நெடு நாளாகவில்லையே! அயல் மொழியிற்கொண்ட ஆர்வம், தமிழ் மக்களை நடை, உடை முதலியவற்றிலும் நனிமாறச் செய்துவிட்டதை நாம் அறிவோம். ஆங்கில ஆட்சி நீங்கிய பின்னர், மக்களிடையே தாய் மொழி உணர்ச்சி தலை தூக்குகிறது. இது குறுகிய

மனப்பான்மையின் விளைவு என்று கருதுவாரும் இல்லாமல் இல்லை. இக்கருத்துத் தவறானது என்பதைத் தமிழ்ச்சான்றோராகிய கணியன் பூங்குன்றனார் நெடுங்காலத்துக்கு முன்னரே எழுப்பிய குரல் தெளிவுறுத்தும் :

*" யாதும் ஊரே; யாவரும் கேளிர்"*

என்பது அவர் கூற்று. பண்பட்ட தமிழன் எவனும் என்றும் 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்' என்னும் புகழுக்குரியவனாகவே வாழ்ந்தான்—வாழ்கிறான்—வாழ்வான். மக்கள் வாழ்வை உயர்த்துவனவற்றுள் மொழியினுஞ்சிறந்த கருவி பிறதின்று என்பதை உணர்ந்து, தமிழ் மன்னர் பலர் சங்கம் அமைத்துத் தமிழை வளர்த்து வந்தனர்.

*" உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்*
*பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே."*

என்றவன் கஞ்சிக்கழுதவன் அல்லன்; முடி புனைந்த ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன். அன்று அரசரும் மொழித்திறம் பெற்று அறிஞர் சொல்வழி நின்று ஆட்சி புரிந்து மொழிக்கு வாழ்ச்சி அளித்தனர். தமிழாட்சி மறைந்த பின்னர்த் தமிழ் மொழிக்கும் ஊறு நேர்ந்தது. இயற்றமிழ் நூல்களுட் பலவும், இசைத்தமிழ் நூல்கள் பலவும், நாடகத் தமிழ் நூல்கள் பலவும் மறைந்தொழிந்தன; புலவரும் 'போற்றும் புலவரும் வேறு; பொருள்தெரிந்து தேற்றும் புலவரும் வேறு' என வகுத்துக் கூறும் வகையினர் ஆயினர்.

இன்று, 'பேசுவது போலவே தமிழ் எழுதப்பட வேண்டும்' என்னும் மதியுரை வழங்குவாரைக் காண

கிறோம். 'யார் பேசுவதைப் போல எழுதுவது?' என்னும் வினாவிற்கு அவர்கள் கூறும் விடை எது வாய் இருக்கும் என்பது எண்ணத்தக்கது. எந்நாட்டிலும் இலக்கிய மொழியும் இழிசினர் மொழியும் வேறுபட்டே இயங்குகின்றன என்பதை அயல் மொழி நாடகங்களையும் நம் நாட்டு மொழிகளிலுள்ள நாடகங்களையும் படிப்பவர்கள் நன்கு அறிவார்கள்.

தமிழை 'முத்தமிழ்' என்று வழங்கிய தமிழ்ச் சான்றோர்கள் இவ்வுண்மையை ஆய்ந்தறிந்த அறிஞர்கள் என்பதில் ஐயமில்லை. 'தமிழ்' என்னும் மூன்றெழுத்துப் பெயரில் மொழிக்குரிய எழுத்தொலிகளுள் வன்மை, மென்மை, இடைமை, உயிர், மெய் ஆகிய அனைத்தும் அமைந்துள்ளதைக் காண்கிறோம். மொழிக்கு வன்மையும் வேண்டும்; மென்மையும் வேண்டும்; இடைமையும் வேண்டும்.

சிறுவர்க்கும் சிறுமியர்க்கும் 'பசுவுக்குத் தண்ணீர் காட்டு,' என்று எழுதுவது பொருந்தும். இதனால்,

*'ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற்*
*கிரப்பின் இளிவந்த தில்.'*

என்னும் வள்ளுவர் வாக்கை அரிதுணர் பொருளது எனக் கருதிக் கொள்ளாது ஒழிக்கலாமா? எளிய நடையில் எழுதுவது பலர்க்கும் பயன்படத்தக்கது என்பதை எதிர்ப்பார் எவரும் இல்லை. பிழை மலிந்த தமிழை, மரபுக்கு ஒவ்வாத முறையில், எழுத்தறிவின்றி எழுதிப் பரப்பி, முன்னோர் கட்டிய மொழிக் கலைக்கோயிலைச் சிதைப்பதுதான் அறிஞர் கண்டு வருந்தத் தக்கது! 'அது பசு,' என்பது தமிழறிஞர் கற்பித்த எளிய நடை.

*'எழுவாய் உருபு திரிபில் பெயரே;*
*வினைபெயர் விளுக்கொளல் அதன்பய னிலையே.'*

என்பது பவணந்தி முனிவர் கற்பித்த முற்றுச்சொற்றொடரின் இலக்கணம். இதற்கு இயைய 'அது' என்னும் சுட்டுப்பெயர் எழுவாய், 'பசு' என்னும் பெயர்ப்பயனிலை கொண்டு முடிந்தது. இதிற்சொற்சுருக்கமும் பொருட்பெருக்கமும் அமைந்திருப்பதைக் காணலாம். தமிழ் மொழிக்குரிய பத்து அழகுகளுள் 'சுருங்கச் சொல்லல்' என்பது தலையாய அழகு. இதை ஒழித்து, 'அது ஒரு பசுவாய் இருக்கிறது,' என்பது வேண்டா கூறல். அது என்பதே ஒருமையைக் குறித்துவிட்டது, எனவே, 'ஒரு' என்பது வேண்டாத சொல். 'ஆய் இருக்கிறது' என்பது ஒன்று மற்றொன்றாய் மாறியிருக்கிறதைக் குறிக்கும். அவ்வித மாற்றம் எதற்கும் இங்கு இடமின்மையால், அத்தொடரும் வீணே. எனவேதான்,

*" எழுத்தறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும்*
*எழுத்தறிவார்க் காணின் இலையாம்."*

என்றார் சிவப்பிரகாசர். இலக்கணப் பயிற்சியின் இன்றியமையாமையை வற்புறுத்தும் தமிழ்ச்சான்றோரின் கருத்தை எதிர் ஒலிப்பார் போல, ஆங்கில மொழிப் புலமை சான்ற ஆரன் தூக்கு என்பாரும்,

'Grammar, though a difficult study, is absolutely necessary in the search after philosophical truth. ......and is no less necessary in the most important questions concerning religion and civil society.'—*Horn Tooke*

எனக் கூறியிருப்பது இங்குக் கருதத்தக்கது.

கன்பூசியஸ் என்னும் சீனத் தத்துவ ஞானியார் (கி.மு 551-478), அறிஞர் ஒருவர் தம்மை நோக்கி. 'பெரியீர், சமுதாயத்தை ஆளும் பொறுப்பு உம்மிடம் விடப்படுமாயின், நீவிர் யாது செய்வீர் ?' என்று வினவிய போது, 'நான் முதற்கண் மொழியைத் திருத்துவேன்,' என்று கூறித் தம் விளக்கமும் தந்தனராம். அவரது வாழ்க்கை வரலாற்றின் ஆங்கில மொழிபெயர்ப்பிலிருந்து இச்செய்தியை அறிகிறோம். அது பின் வருவது :

'I would correct the language. If language is not correct, what is said is not what is meant; if what is said is not what is meant then what is to be done remains undone; if this remains undone, morals and art will deteriorate; justice will go astray; the people will stand about in helpless confusion. Hence there must be no arbitrariness in what is said. This matters above everything.'

'லா புரூயே' என்னும் பிரெஞ்சு மொழி அறிஞர் மொழியை 'விஞ்ஞானங்களுக்குத் திறவுகோல்' எனப் பாராட்டினார்.

*'பழையன கழிதலும் புதியன புகுதலும்*
*வழுவல கால வகையி னானே.'*

என்பது, மொழியிலக்கணப் புறனடை. பயனற்றவை தாமே கழிதலும், பயனுள்ள புதியன தாமே புகுதலும் கால வேறுபாட்டால் குற்றமாகா. பயனுள்ள பழையனவற்றை நாம் கழித்தலும், பயனற்ற புதியனவற்றை நாமே புகுத்தலும் வழுவாம்.

# அருஞ்சொல் முதலியவற்றின் அகராதி

அகத்தியம் - அகத்தியரால் செய்யப்பட்ட இலக்கணம்
அசரீரி - உடலற்றது (வான் ஒலி)
அஞ்சிறை - (அகம்+சிறை) உட்சிறகு
அறுமூவுடம்பு - பதினெட்டு மெய்யெழுத்துகள்
அனுவதித்தல் - மீண்டும் சொல்லுதல்
ஆகரம் - இடம்
ஆதிக்கம் - தலைமை
ஆல் - ஆலவிழுது
ஆலவாய் - மதுரை
இரண்டு - இரண்டடியாலான குறட்பா
இரீஇயினார் - இருக்கச் செய்தவர்
இருக்கை - இருப்பிடம்
இறையனார் - சிவபெருமான்
இன்னிலை (இல்+நிலை)-இல்லற ஒழுக்கம்
உத்தரமதுரை - வடமதுரை
உதயணன் கதை - பெருங்கதை (10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கொங்குவேளிர் என்னும் புலவரால் இயற்றப்பட்ட நூல்)
உருபு - வேற்றுமையைக் குறிக்கும் 'ஐ' முதலிய இடைச்சொற்கள்
எத்துணையோ - எவ்வளவோ
எப்பாலவரும்-எல்லா இடங்களிலும் வாழ்பவரும்
எல்லை உரை - விளக்கவுரை
எறிந்த - அழித்த
என்ப - என்று கூறுவர்
என்மனார் - எனச்சொல்லுவர்
ஓரீஇ - நீக்கி
ஒருதலை - நிச்சயம்
ஒல்காப்புகழ் - குன்றாத சீர்
ஓத்து - வேதம்
கடம்பவன புராணம் - வீமநாத பண்டிதர் இயற்றிய புராணம்
கடம்பவனம் - மதுரை
கடாம் - மலைபடுகடாம் என்னும் கூத்தர் ஆற்றுப்படை
கபாடபுரம்-கடலில் மூழ்கிய பாண்டி நாட்டின் பழைய தலை நகரம்
கருப்புவேலி - கரும்புக்கு வேலி
கருவூலம்-பொக்கிஷ அறை
கல்லாடம் - 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கல்லாடர் என்பவரால் இயற்றப்பட்ட 100 அகவற்பாக்களாலான அகப்பொருள் இலக்கியம்
கலி - மறைந்து போன ஓர் இலக்கியம்
கவியரங்கேறினார் - சங்கப் புலவர்களால் கவிஞரென ஒப்புக்கொள்ளப்பட்டவர்.
களரியாவிரை - மறைந்து போன கடைச்சங்க நூல்
களவியல் - அகப்பொருள் இலக்கணம்
களவியற்காரிகை-களவியலை விளக்கும் ஒரு நூல்
கறுத்த - கோபித்த
கறை - நஞ்சு

கறைமிடற்றோன்-சிவன்
காடுகாள் -காளி
காமம் - விருப்பம்
காய்ந்தவர் - கோபித்தவர்
காராம் பசு - பசுவின் வகை
கிளந்த - சொல்லிய
கிளவி - சொல்
கீழ்க்கணக்கு - நாலடியார் முதலிய பதினெட்டுச் சிற்றிலக்கியங்கள்
குருகு - மறைந்துபோன ஓர் இலக்கியம்.
குறிஞ்சி - குறிஞ்சிப்பாட்டு
குறியீடுகள் - பெயரமைப்புகள்
குன்றக் கூகை - குன்றில் வாழும் கோட்டான்
குன்றம் - கிரவுஞ்ச மலை
கூத்தியர் - நாடகக் கணிகையர்
கைந்நிலை - ஒழுக்கமுறை
கொங்கு - மகரந்தம்
கோவை - ஆசாரக்கோவை
சகடம் - வண்டி
சண்பு - கோரை வகை
சதுக்கம் - நான்கு தெருக்கள் கூடுமிடம்
சந்தி - எழுத்துப் புணர்ச்சி
சமழ்ப்பு - வெட்கம்
சரணத்தர் - ஒருசார் வேத சாகை ஓதுபவர்
சலம் - தணியாக் கோபம்
சவட்டுதல் - மெல்லுதல்
சிந்தாசமுத்தி - எண்ணத்தை அறிந்து முடிக்கும் பாட்டு
சீகாளத்திப்புராணம்-17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவப்பிரகாசர் கருணைப்பிரகாசர் வேலைய சுவாமிகள் ஆகிய மூவரால் இயற்றப்பட்ட புராணம்
செவ்வேள் - முருகன்
செவி வழிச் செய்தி - கன்ன பரம்பரைச் செய்தி
தரம் - தகுதி
தமிழ் நாவலர் சரிதை-புலவர் பலர் பல்வேறுகாலங்களிற் பாடிய தனிப்பாடல்களை அவை பாடப்பாட்ட வரலாற்றுக்குறிப்புடன் கூறும் தொகுப்பு நூல்
தமிழ்விடு தூது-இயற்றியவர் பெயர் மறைந்த ஒரு நூல்; சிறந்த பிற்காலச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
தாய்மூவர் - தாயொடுமூவர்
திரட்டு - (பெருந்திரட்டு, குறுந்திரட்டு என்பவை போலும்) தொகுப்பு நூல்
திருக்குருகூர் மாறன் - நம்மாழ்வார்
திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம் - 12-ஆம் நூற்றாண்டில்வாழ்ந்த பெரும்பற்றப்புலியூர் நம்பி என்பவர் இயற்றியது
திருவிளையாடற்புராணம் - 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பரஞ்சோதி முனிவர் இயற்றியது.
தெருட்டு - அறிவுறுத்துதல்
தொகை - நற்றிணை முதலிய எட்டுத் தொகை நூல்கள்
தொழீஇ - வேலைக்காரி
தொன்று - பழமை
நக்குப் பொறுக்கிகள் - எச்சிலைப் பொறுக்கி உண்பவர்கள்
நல்லாணை-சிறந்த கட்டளை
நாமகள் - கலைமகள்
நாமம் - பெயர்

**நாலடி** - நான்கு அடிகளையுடைய வெண்பாவாலான நாலடியார் எனனும் நீதி நூல்
**நிதியின் கிழவன்** - குபேரன்
**நிருத்தர்** - நடனம் செய்பவராகிய சிவபெருமான்
**நுதலியது** - கருதியது.
**நுழைபுலம்** - கூரிய அறிவு
**நூல்** - இலக்கணம்
**நூற்பா**-இலக்கணச் சூத்திரம்
**நெடில் வெண்பா** - பஃறொடை வெண்பா.
**நெடுந்தொகை நானூறு** - அகநானூறு
**பட்டி தொட்டிகள்** - சிற்றூர்களும் விறகுக் கடைகளும்
**பட்டியல்** - அட்டவணை
**பயின்றிடுவாள்** - தங்கியிருப்பாள்
**பரிபாடல்** - பல வகை யாப்புறுப்பமைந்த பண் சுமந்த பாடல்களடங்கிய நூல்
**பாகதச்சிதைவு** - பிராகிருத மொழியிலிருந்து சிதைந்து தமிழில் வழங்குஞ்சொல்
**பாட்டு** - பத்துப்பாட்டு
**பாணிரண்டு** - சிறுபாணாற்றுப்படையும் பெரும்பாணாற்றுப்படையும்
**பாதது** - பகுத்து
**பாரித்துக் கூறுகின்றது**-பரக்கக் கூறுகின்றது
**பிணக்கு** - மாறுபாடு
**பிரகரணம்** - அத்தியாயம்.
**பிராயத்தள்**-வயதுடையவள்
**புத்தேள்** - தேவன்
**புனைந்து** - அலங்கரித்து
**பெயர் வழி**-பெயருக்குப்பின்
**பெருங்குருகு** - மறைந்துபோன இசைத்தமிழ் இலக்கணம்,
**பெருநாரை**-மறைந்துபோன இசைத்தமிழ் இலக்கணம்
**பேழை** - பெட்டி
**பேறுகள்** - செல்வங்கள்
**பொத்தகம்** - ஓலைச்சுவடி
**பொருநாறு** - பொருநராற்றுப்படை
**மாடம்** - மேற்கட்டமைந்த வீடு
**மாமூலம்** - சிறு பஞ்ச மூலம்
**முப்பால்** - (அறம், பொருள், இன்பமாகிய) மூன்று பகுதிகளை விளக்கும் திருக்குறள்
**முருகு** - திருமுருகாற்றுப்படை
**முல்லை** - முல்லைப்பாட்டு
**மேற்கணக்கு** - பத்துப்பாட்டும் எட்டுத்தொகையுமாகிய பதினெட்டுப் பேரிலக்கியங்கள்
**வகுத்தல்** - வரையறுத்துக் கூறுதல்
**வாசினை** - வாசித்தல்
**வாமம்** - ஒளி
**வாம மேகலை** - ஒளியுடைய மேகலாபரணம்
**வாரணம்** - கடல்
**வாழ்ச்சி** - வாழ்வு
**வாழித்திருநாமம்** - ஆசிரியரைப் பெயர் குறித்து வாழ்த்தும் பாடல்
**விதந்து ஓதுதல்** - எடுத்துக் கூறுதல்
**வெண்டாளி** - இறந்துபட்ட ஓர் இலக்கியம்
**வேல்** - வேலங்குச்சி
**வையை** - வைகையாறு

விலை ரூபாய் ஒன்றேகால் (ரூ 1. 25)